15வது வருடத்தில்

# விளம்பரம்

VLAMBARAM™

☎ 416-282-8059　　416-282-4978


வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 16 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2005



05 என்ன மச்சான்! எப்பிடி சுகம்?



15 தண்ணீர் மருத்துவம்

நான்காவது சர்வதேச தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா
**செப்ரெம்பர் 24, 2005**

## இலக்கம் “8”

*இலக்கங்கள் அல்லது எண்கள் எப்படி அதிஷ்டத்தை / துர்அதிஷ்டத்தை தோற்றுவிக்கிறன என்பது எனக்கு இன்னும் புரியாத புதிராகவே இருக்கின்றது. எண்களின் அடிப்படையில் கணிதம் இயங்குகிறது. கணிதத்தின் அடிப்படையில் உலகில் பல செயல்பாடுகள் நடக்கின்றன. இதில் இலக்கங்கள் தங்களுக்கு பலனைத் தோற்றுவிக் கிறன என்பது சற்று சிந்திக்கவேண்டிய விடயமே!.*

*எண்களின் குணங்கள் என்று கருதப்படும் எண் சோதிடத்தை இந்தியாவில் பல ஆராட்சியாளர்கள் ஆய்வு செய்து எண்களுக்கென்று ஒரு மகத்துவத்தை ஏற்படுத்தி னார்கள். அதைப் பற்றிய முழுமூச்சுப் பேச்சுக்களும் இற்றைக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னம் பேசப்பட்டும், கருதப்பட்டும், விடயங்கள் இதன் அடிப்படையில் மாற்றப்பட்டும் வந்தன. ஆனால் இவற்றில் எவ்வளவு தூரம் உண்மை பொதிந்துள்ளது என்பது வேறு சில எடுத்துக் காட்டுகளை பார்க்கும்போது, மக்களுடைய இக்கருத்துக் கள் சரியானவையா என்று ஆராயவேண்டி இருக்கிறது.*

*இலக்கம் ஐந்து (5) ஐ மனத்தில் நினைப்பதென்பது ஒரு விடயம். ஆனால் ஐந்துபொருட்களை கண்ணால் பார்ப்பதும் அல்லது கையினால் தொட்டு உணர்வதும் முற்றிலும் வேறுபாடான இன்னோர் விடயம். ஆகவே கண்ணில் தென்படும் இலக்கமும் காதினால் கேட்கப்படும் இலக்கமும் மனதில் பதிவாகும் இலக்கமும் படர்க்கையான விடயமேயன்றி இயங்கத்தக்க இயக்கத்தக்க சக்தி படைத்தவைகள் அல்ல.*

*இரண்டு பொருட்கள் மோதியது, மூன்று பொருட்கள் மோதியது, ஐந்து பொருட்கள் மோதியது இப்படியே பத்துப்பொருட்கள் மோதியது என்று சம்பவங்களை, இயக்கங்களை இலக்கத்தின் அடிப்படையில் எம்மால் அடையாளம் கொள்ளவும், அனுபவிக்கவும், ஏதுவாக வுள்ளதே தவிர இலக்கங்கள் வலிமைபெற்றவை, குணங்கள் கொண்டவை என்பது இன்னும் கேள்விக்குரிய விடயம். தனித்த ஒரு நூலின் வலிமைக்கும், திரட்டிய நூறு நூலின் வலிமைக்கும் வித்தியாசமான குணங்கள் உண்டு. இவை பௌதீக அடிப்படையில் உண்மை. ஆனால் இவற்றை எழுதும் அடிப்படையில், பார்வையின்*

தொடர்ச்சி 04ம் பக்கம்

# கதிர்காமர் கொலையின் சூத்திரதாரி யார்?

*இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் கதிர்காமரின் படுகொலைக்கும் தமக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.*



*புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்செல்வன் இது பற்றிக் கூறும்போது ‘தென்னிலங்கையில் நடைபெறும் படுகொலைகளுக்கு இலங்கை அரசாங்கமும், பாதுகாப்பு படைகளும் உடனடியாக புலிகளின் மீது பழிபோடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர்’ என்று கூறுகின்றார்.*


*கொலைகளுக்கான காரணங்களையும் ஆதாரங்களையும் ஆராயாமல் தம்மீதே பழிகள் போடுவதை புலிகள் வன்மையாக கண்டித்துள்ளனர்.*

*அமைச்சரின் படுகொலையை அடுத்து இலங்கையில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்து விடும் என்று எழுந்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. ‘இலங்கையின் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை அரசு விலகிக் கொள்ளவில்லை’ என இலங்கை அரசு அறிவித்துள்ளது.*

*நோர்வே நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தக் கொலையை கடுமையாகக் கண்டித்துள்ளார்.*

*‘இலங்கை அரசின் உறுப்பினருக்கு எதிரான ஏற்றுக் கொள்ள முடியாத நடவடிக்கையாகும்’ என்று கனடா வெளியுறவுத் துறை அமைச்சர் பியரி பெட்டிகிரே தெரிவித்துள்ளார்.*

*கதிர்காமரின் படுகொலையை அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் காண்டலீனா ரைஸ், பிரிட்டன், மற்றும் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் கோபி அன்னான் ஆகியோரும் மிக வன்மையாக கண்டித்துள்ளனர்.*




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.


Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)



துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221



“Making Dreams Reality”
HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER



Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business
416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)



வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# "பணம் பணம்"

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை" என்றார் திருவள்ளுவர். அதையே காசேதான் கடவுள் அடா என்று தமிழ் திரைப்படப் பாடல் ஒன்று. வறுமை கொடிது, இளமையில் வறுமை அதனிலும் கொடிது என்பர். என்னுடைய உறவினர் ஒருவர், சிறுவயதில் எனக்குப் புத்திமதி கூறும்போது, கண் இமையில் (இமை ஓரத்தில்) ஊசியை வைத்துக் கொண்டு, கீழே விழாமல் காக்க வேண்டும் என்றால் எத்தகைய முயற்சி எடுப்பாயோ அத்தகைய முயற்சி பாடுபட்டுச் சேர்த்த பொருளைப் பாதுகாக்கவும் தேவை என்று கூறியது என் நினைவிற்கு வருகின்றது.

நீங்கள் பணத்தை நிர்வகிப்பதில் கெட்டிக்காரரா? ஒரு சின்ன தேர்வு வைப்போம். விடைத்தாளைத் தயாரித்திருப்பது கனடியன் வங்கியர் அமைப்பு (Canadian Bankers Association)

1. உங்கள் கிரிடிட் கார்ட் மற்றும் மின்சாரம், தண்ணீர் போன்றவற்றிற்கான பில்களைத் (Bills) தாமதமாகக் கட்டுகிறீர்களா?
2. உங்கள் வருமானத்தின் பெரும்பகுதி கடன்களைக் கட்டவே பயன்படுத்தப் படுகின்றதா?
3. மற்ற காரியங்களுக்கு என்று திட்டமிட்டிருந்த பணத்திலிருந்து கிரிடிட்கார்ட் மற்றும் மின்சாரம், ரெலிபோன் போன்றவற்றிற்கான பில்களைக்

**பகுதி - 08**

கட்டுகின்றீர்களா?
4. உங்கள் கடன் மற்றும் கிரிடிட்கார்டுகளுக்குக் குறைந்த அளவு பணத்தையே மாதந்தோறும் கட்டுகிறீர்களா?
5. உங்கள் கிரிடிட்கார்ட்டை அதிகபட்ச அளவு அல்லது லிமிட்டிற்கு மேல் உபயோகிக்கிறீர்களா?
6. முன்பு ரொக்கத்தில் வாங்கிய பொருட்களை இப்போது கிரிடிட்கார்டில் வாங்குகிறீர்களா?
7. உங்கள் சேமிப்பை பில்களுக்கு பணம் கட்ட உபயோகப் படுத்துகிறீர்களா?
8. காலம் கடந்த பணக்கொடுப்பனவுக்காக, கலைக்ஷன் ஏஜன்ஸி (Collection Agency) ஏதேனும் சமீபத்தில் உங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டது உண்டா?
9. பல் வைத்தியரிடம் செல்வதையோ, மருந்து வாங்குவதையோ பணம் இல்லை என்ற காரணத்துக்காக தள்ளிப் போட்டது உண்டா?
10. உங்களுக்குகோ, உங்கள் வாழ்க்கைத் துணைக்கோ, வேலை இழப்பு ஏற்பட்டால், உங்களுக்கு உடனே பணத் தொல்லைகள் ஏற்படுமா?
11. நீங்கள் கடன்பட்டிருப்பது எவ்வளவு என்று கணக்கு உங்களுக்குத் துல்லியமாகத் தெரியாதா?



கேள்விகள் அவ்வளவுதான். பதில் அளித்து விட்டீர்களா? எத்தனை கேள்விகளுக்கு "ஆம்" என்று பதில் அளித்துள்ளீர்கள். அதை வைத்தே இப்போதைக்கு உங்கள் நிதிநிலைமையை நிதி ஆரோக்கியத்தைத் தீர்மானிக்கப் போகின்றோம். ஒரு கேள்விக்குமே "ஆம்" என்று பதில் அளிக்கவில்லை என்றால், அதாவது உங்கள் மதிப்பெண் பூஜ்யம் அல்லது 0 என்றால், நீங்கள் நல்ல நிதி ஆரோக்கியத்தில் இருக்கிறீர்கள் என்று பொருள். உங்களுக்கு வைத்தியம் எதுவும் தேவை இல்லை. நீங்கள், கடன், திட்டமிடல், சேமிப்பு என்று எல்லாவற்றிலும் சிரத்தை எடுத்துக் கொள்பவர். இந்தக் கட்டுரைத் தொடர் உங்களைப் போன்றவர்களுக்கும் சில உபயோகமான விடயங்களைத் தரஉள்ளது.

மதிப்பெண் 1 - 2. (அதாவது ஒன்று அல்லது இரண்டு ஆம் என்று பதில் அளித்துள்ளீர்). உங்கள் நிதி ஆரோக்கியம் நல்ல நிலையிலேயே உள்ளது. ஆனாலும் நீங்கள் வரவுக்கு ஏற்ற செலவு, செய்கிறீர்களா என்று விழிப்புடன் கண்காணிக்க வேண்டும். முக்கியமாக கடன் விடயத்தில் கவனம் செலுத்துங்கள். கண்டதும் எப்பொருள் மீதும் காதல் கொண்டு உடனே வாங்காதீர்கள். ஒரு பொருளை வாங்குமுன் விலையை விசாரியுங்கள். கடனும் ஒரு பொருளோ, இந்த விலைக்கு இந்தப் பொருள் தேவையா? அல்லது இதே பொருள் வேறு எங்கேனும் இதை விடக்குறைந்த விலைக்குக் கிடைக்குமா?

**பெரி. முத்துராமன்**

எனபன போன்ற கேள்விகளைக் கேட்டு முடிவு எடுங்கள்.

மதிப்பெண் 3 - 6. உங்களின் நிதி வாகனம், பிரேக் குறைந்தோ, இல்லாமலோ ஓடுவதற்கான அறிகுறி இது. உடனே குறைபாட்டைச் சரி செய்யுங்கள். இல்லையேல் விபத்து நேரலாம். உங்கள் கடன் அட்டைகளை (Credit Card) குறைக்க முயற்சி எடுங்கள். திட்டமிட்டுச் செலவு செய்யுங்கள். இது இவ்வாறு என்று இன்னொருவாரம் பார்போம். தேவையற்ற செலவுகளைத் தெரிவு செய்து குறைப்பதற்கோ, நீக்குவதற்கோ ஆன நடவடிக்கைகளை உடனே எடுங்கள். நாம் முன்னர் குறிப்பிட்ட பதினொரு கேள்விகளுக்கும் "இல்லை" என்று சொல்ல என்ன செய்ய வேண்டுமோ, அதை உடனே செய்ய நீங்கள் தொடங்க வேண்டும்.

மதிப்பெண் 7 ஆம் அதற்கு மேலும். தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்வதற்கான அழைப்பு வந்துவிட்டது. நீங்கள் ஏற்கனவே பெரிய பணப்பிரச்சினையில் இருக்க வேண்டும். ஒரு நல்ல நிதி ஆலோசகரை உடனே பார்ப்பது நல்லது. ஒன்ராரியா மாநிலத்தில், இந்தச் சேவையில் ஈடுபாட்டுள்ள இரு நிறுவனங்கள்.

Credit Counselling Service of Toronto
Tel. 416. 228. 3328
1 . 800. 267. 2272
www.creditcanada.com

Ontario Association of Credit Counselling Services
Tel. 1.888.746.3328 Fax. 905.945.4680

இன்னும் பல நிறுவனங்களும் இச் சேவையில் ஈடுபட்டுள்ளன. சில சமயங்களில் இந்நிறுவனங்கள் தங்கள் சேவைக்கு சிறிய தொகையை ஊதியமாகப் பெறலாம். அல்லது முற்றிலும் இலவசமாகவும் இருக்கலாம். இவை தவிர வேறு பல தனியார் நிறுவனங்களும் உள்ளன. உங்களுக்கு ஏற்ற ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் அறிவுரைப்படி உங்கள் வரவு செலவுகளை ஒழுங்கு செய்து நிதிநிலைமையைச் சரிப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். இல்லையேல் இப்போதைய நிலைமையை விட பேராபத்து நேரக்கூடும்.

பொருளை நிர்வகிப்பது என்பது இன்றைக்குச் சிக்கல்கள் நிறைந்த காரியமாக உள்ளது. செலவழிப்பதற்குத்தான் எத்தனை வழிகள். ரொக்கம், காசோலை (செக்) கிரிடிட்கார்ட், டெபிட்கார்ட், முன் அங்கீகரிக்கப்பட்ட பண எடுப்புக்கள் (Pre authorized payments) இது தவிர இணையதளம் (Internet). வருமானம் வருவதை விட செலவுக்கான வழிகள் தான் பல சமயங்களில் அதிகமாக உள்ளது. இல்லையா?

பாதுகாப்பான எதிர்காலத்திற்குப் பணம் எங்கிருந்து வருகின்றது. பணம் எங்கே போகின்றது என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதாவது உங்கள் வரவும், செலவும் திட்டமிட்டதாக இருக்க வேண்டும்.

பட்ஜெட் என்பது நாட்டுக்கு மட்டுமல்ல வீட்டுக்கும் கூட அவசியமானது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதன் முதல்படி வீட்டுக்கான பட்ஜெட்டைத் தயாரிப்பதே. திட்டமிடா நாடும் வீடும் முன்னேறாது என்பது புதுமொழி. இதன் தொடர்ச்சியை அடுத்த இதழில் பார்ப்போம்.



# காப்புறுதி முகவர்கள் தன்னிச்சையாக இயங்கலாமா?

**காப்புறுதி நிறுவனங்களுக்கும் வாடிக்கையாளருக்கும் இடையே செயல்படும் முகவர்களின் செயல் பாட்டில் அரசின் கண்காணிப்பு எப்படியிருக்கும்?**

இங்கு காப்புறுதி நிறுவனங்களுக்கும், முகவர்களுக்கும் இடையே செயல்படும் முகவர்களை அவர்கள் கனடாவின் எந்த மாகாணத்தில் இருந்து செயல்படுகின்றார்களோ அந்த மாகாண அரசு அவர்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தினை வழங்கி அவர்களின் செயல்பாட்டினையும் கண்காணித்து கொண்டேயிருக்கும்.

இக்காப்புறுதி முகவர்களின் பணி புரியும் துறையினையும், படித்து சித்தியடைந்த துறைகளையும் மாகாண அரசினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தினை இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

(அ) ஆயுள், மருத்துவ, காப்புறுதி முகவர் (Life & Health Insurance Agent)

இம் முகவருக்கு உரிய அனுமதிப்பத்திரத்தினை உதாரணமாக ஒன்ராரியோ மாகாணத்தில் மாகாண நிதி அமைச்சின் ஒரு பிரிவான "Financial Services Commission of Ontario" என்னும் நிறுவனம் வழங்கி முகவரின் செயல்பாட்டினையும் கண்காணித்து வருகின்றது. இம் முகவர்களுக்குரிய கற்கை நெறிகள், பரீட்சைகள், பயிற்சி நெறிகளை "Canadian Life & Health Insurance Association " என்னும் நிறுவனம் நடத்துகின்றது.


(ஆ) பொருட்கள், சொத்துகள், வர்த்தக நிறுவனங்கள் வாகனங்களின் காப்புறுதி முகவர் (Property & Casualty Insurance Agent அல்லது General Insurance Agent) இம் முகவர்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தினை "Registered Insurance Brokers Organization" என்னும் மாகாண அரசின் நிறுவனம் வழங்குகின்றது.


**சிவ. பஞ்சலிங்கம் B. Com,**
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


இம் முகவர்களுக்குரிய கற்கை நெறிகள் பரீட்சைகள், பயிற்சி நெறிகளை "Insurance Council of Canada" என்னும் நிறுவனம் நடத்துகின்றது.

இவ்விரு துறைகளில் உள்ள முகவர்களும், தமது தொழில் செய்து வரும் காலங்களில் ஒவ்வொரு வருடமும் கனடாவில் மாறிவரும் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையும் காப்புறுதிகள் தொடர்பான கற்கை நெறிகளுக்கு குறிப்பிட்ட மணித்தியாலங்கள் சென்று பயிற்சி பெற வேண்டும் என்பதும் ஒவ்வொரு வருடமும் தங்கள் அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயமாகும்.

இது தவிர ஒரு முகவரின் தவறு என்பது வாடிக்கையாளரை பாதிக்கும் நிலையில் நிவாரணம் வழங்குவதற்காக கண்டிப்பாக ஒரு தொழில் பொறுப்பு காப்புறுதி (Professional Liability Insurance) என்பதும் வைத்திருக்க வேண்டியது முக்கியமானது என்பதில் வாடிக்கையாளர்கள் நலன் கருதி பல வழிகளிலும் மாகாண அரசு முகவர் ஒவ்வொருவரையும் கண்காணித்து வருகின்றது.




**விளம்பரம்**
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள...
• வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
**ந. தயாபரன்**
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# வட அமெரிக்கரின் உயிரைக் குடிப்பதில் அதிக ஆர்வமான ஆள் பின்லாடனா?

## லப் - டப் - 1

'பட பட வென்று அவன் இதயம் துடித்தது' என்று சுஜாதாவின் கதையிலாகட்டும், அல்லது நம்ம அ. முத்துலிங்கம் கதையிலாகட்டும் நீங்கள் வாசித்திருந்தால் அது சரியான பிழையுங்கோ. அப்படியெல்லாம் தப்புத் தப்பாய் எழுதக் கூடியவர்கள் இவர்கள் இல்லை என்பதால், நீங்கள் வாசித்தது வேறுயாருடையதோ கதையாக இருக்கலாம்.

இதயம் ஒரு போதும் பட பட வென்று துடிப்பதில்லை. அப்படியானால் அது கட கட என்று துடிக்கின்றதா? ஊகும், இதயம் கட கட என்று துடிப்பதில்லை, கிடு கிடு என்றும் துடிப்பதில்லை.

சமயத்திற்கு ஏற்ப நாம் மனசை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் இதயம் மட்டும் சமயத்துக்கு ஏற்ப மாறி மாறி சத்தமிட்டுத் துடிப்பது கிடையாது.

**செழியன்**



இதயம் லப்- டப் என்று துடிக்கின்றது.

இந்த சத்தம் இதயத்தில் உள்ள வால்வுகள் (கதவுகள்) மூடும் போது எழும்புகின்றது.

இதயம் நான்கு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு அறைகளும் தசைகளால் ஆன சுவர்களால் பிரிக்கப்பட்டுள்ளன. இதயத்தின் மேல் பக்கமாக இரண்டு அறைகளும், கீழ்ப் பக்கமாக இரண்டு அறைகளும் உள்ளன. இதயத்தின் மேல்பக்கம் சுருங்குவதன் மூலம், இதயத்தின் மேல் இரண்டு அறைகளில் உள்ள குருதி, இதயத்தின் கீழ் அறைகளுக்குள் சென்று நிறைகின்றது. இவ்விதம் கீழ் இதய அறையினுள் குருதி சென்று நிறைந்ததும் அந்தக் குருதி மறுபடியும் வந்த வழி செல்லாமல் இருப்பதற்காக இடையில் உள்ள வால்வுகள் வந்த பாதையை மூடிக்கொள்கின்றன. அப்போது 'லப்' என்ற சத்தம் எழுகின்றது. Tricuspid, Mitral வால்வுகள் மூடுகின்ற போதே இந்த 'லப்' சத்தம் எழுகின்றது.

**உரிய நேரத்தில் முதல் உதவி கிடைக்காததே பல சமயங்களில் மாரடைப்பால் உயிர் இழந்து போவதற்குரிய காரணமாகும். எனவே மாரடைப்பு ஏற்படலாம் என்பதற்குரிய அறிகுறிகள் தெரிந்தால் உடன் 911 இலக்கத்தை அழைத்து விட வேண்டும்.**

பின்னர் இதயத்தின் கீழ்ப்பக்கம் சுருங்கி அமுக்கம் ஏற்படுவதால், கீழ் அறைகளில் உள்ள குருதி இதயத்தை விட்டு வெளியே தள்ளப்படுகின்றது. இதயத்தின் வலது பக்க கீழ் அறையில் உள்ள குருதி, பிராண வாயுவைப் (ஓட்சிசனை) பெற்றுக் கொள்வதற்காக சுவாசப்பைகளை நோக்கியும், இதயத்தின் இடது பக்க கீழ் அறையில் உள்ள குருதி உடலின் எல்லாப் பாகங்களுக்கும் ஒட்சிசனைக் கொடுப்பதற்காகவும் வெளியேற்றப்படும். இவ்விதம் இதயத்தை விட்டு வெளியேற்றப்படும் குருதி, மறுபடி இதயத்திற்குள் வரவிடாமல் Pulmonic, Aortic வால்வுகள் பாதையை மூடிக் கொள்ளும் போது 'டப்' என்ற சத்தம் எழுகின்றது.

நிமிடத்திற்கு சராசரியாக எழுபத்தி இரண்டு தடவைகள் ஒரு மனிதனின் இதயம் துடிக்கின்றது. நாள் ஒன்றுக்கு இதயம் ஒரு இலட்சம் தடவைகளுக்கு மேல் துடிக்கின்றது. வருடத்திற்கு ஏறத்தாள முப்பத்தெட்டு மில்லியன் தரம் துடிக்கின்றது. உங்களுக்கு எழுபது வயதாகும் போது, சராசரியாக 2.5 பில்லியன் தடவைகள் இதயம் துடித்து களைத்திருக்கும்.

கொஞ்சத் தூரம் நடந்தாலே கால்களுக்கு களைப்பு வந்து விடுகின்றது. சற்று நேரம் ஆறி இருந்து விட்டு போகலாமே என்று கால்கள் கெஞ்சத் தொடங்கிவிடுகின்றன. கண்கள் கூட கொஞ்ச நேரம் மூடிக்கொள்ளவே ஆசைப்படு கின்றன. ஆனால் இதயம் மட்டும் ஓய்வே எடுக்காமல் துடித்துக் கொண்டே இருக்கின்றது. எப்போதுமே துடித்துக் கொண்டிருக்கும் கலங்களால் இதயம் உருவாக்கப்படுவதே இதற்குக் காரணமாகும். இதயத்தில் இருந்து ஒரு கலத்தை வெட்டி எடுத்து தண்ணீரில் போட்டாலும் அது இறந்து போகும் வரை துடித்துக் கொண்டேயிருக்கும்.

பிறந்த குழந்தையின் இதயம் நிமிடத்திற்கு 130 தடவைகள் துடிக்கின்றது. மூன்று மாதக் குழந்தைக்கு இதயம் 140 தடவைகள் துடிக்கும். அதே சமயம் ஆறுமாதக் குழந்தைக்கு இதயம் 130 தடவைகளும், ஒரு வயதுக் குழந்தைக்கு 120 தரங்களும், இரண்டு வயதுக் குழந்தைக்கு 115 தடவைகளும், மூன்று முதல் ஆறுவயதிலான குழந்தைகளுக்கு நூறு தடவைகள், எட்டுவயதில் தொண்ணூறு தடவைகளும், பன்னிரெண்டு வயதில் 85 தடவைகளும், வாலிபப் பருவத்தில் 60-100 தடவைகளுமாக இதயம் துடிக்கின்றது.

ஒரு தடவை இதயம் துடிக்கும் போது எழுபது மில்லி லீற்றர் (2.4 அவுன்ஸ்) குருதியை இதயம் வெளித்தள்ளுகின்றது. சராசரி நிமிடத்திற்கு 72 தடவைகள் துடிக்கின்ற இதயம், நிமிடத்திற்கு ஐந்து லீற்றர் (1.3 கலன்) குருதியை வெளித்தள்ளுகின்றது. இன்னம் சொல்லப் போனால் தினமும் இதயம் 7,200 லீற்றர் குருதியை சளைக்காமல் வெளித்தள்ளுகின்றது.

இந்த விவரங்கள் எல்லாம் சுவாரசியமாகத்தான் இருக்கும். கனடாவில் வருடாந்தம் சுமார் எண்பதினாயிரம் பேர் இதய வருத்தம் காரணமாக உயிர் இழக்கின்றனர் என்ற தகவலும், அமெரிக்காவில் நாற்பத்தி நான்கு செக்கனுக்கு ஒருவர் இதய நோயினால் மரணம் அடைகின்றார் என்ற தகவலும் (தினமும் இரண்டாயிரம் பேர்) நிச்சயமாக உங்களுக்கு சுவாரசியமாக இருக்கமாட்டாது.

கனடாவில் நிகழ்கின்ற மரணங்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்ட மரணங்கள் இதயத்தில் ஏற்படும் கோளாறினாலேயே நிகழ்கின்றது. வட அமெரிக்கரின் உயிரைக் குடிப்பதில் அதிக ஆர்வமான ஆள் பின்லாடன் என்று நீங்கள் நினைத்தால் அது கிடையவே கிடையாது. இதயநோயுடன் ஒப்பிடும் போது இந்த ஆள் ஒரு தூசு.

இதயநோயே வட அமெரிக்கர்களின் உயிரைக் குடிப்பதில் முதன்மையான இடத்தைப் பிடித்துள்ளது (No- 1 Killer). இந்தக் கொடியவன் எப்போதும் உங்களைத் தாக்கலாம். மாரடைப்பு என சில சமயம் சொல்வார்கள். மாரடைப்பு வந்து இறந்து போனார் என்றும் கேள்விப்பட்டு இருப்பீர்கள்.

எந்த விதமான அறிகுறியும், முன்னறிவிப்பும் இல்லாமல் மாரடைப்பு வந்து எமது உயிரைக்குடித்து விட்டுப் போய்விடும் சந்தர்ப்பமும் உள்ளது. நான்கில் ஒரு பங்கு மாரடைப்புகள் இவ்விதம் முன்னறிவித்தல் இல்லாமல் வருகின்றன. ஆனால் பெரும்பான்மையான சமயங்களில் மாரடைப்பு ஏற்படப்போவதற்கான அறிகுறிகள் தென்படும். அந்த அறிகுறிகள் தென்படுவதை நீங்கள் உணர்ந்தால், ஒரு நிமிடத்தைக் கூட காலதாமதம் செய்யாமல் உடன் 911 இலக்கத்தை அழைத்து, உங்களுக்கு ஏற்படும் அறிகுறிகளைச் சொல்லிவிட வேண்டும். உங்களுக்கான உதவி விரைந்து வரும். உங்கள் உயிர் பாதுகாக்கப்படும்.

அப்படி ஒரு சந்தர்ப்பம் எனக்கும் ஏற்பட்டது. அதை அடுத்த இதழில் பார்ப்போமா?

# சைபிரஸ் விமானம் விழுந்து 121பேர் பலி

மறுபடியும் ஒரு விமான விபத்து நடந்துள்ளது. போயிங் 737 என்ற சைபிரஸ் நாட்டு விமானம் கிரேக்க நாட்டு தலைநகரான ஏதென்சில் இறங்குவதற்கு சற்று முன்னதாக திடீரென விழுந்து விட்டது. இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த பயணிகள் (115), விமான ஊழியர்கள் (6) ஆறு பேர் உட்பட அனைவருமே இறந்து போய்விட்டனர். இந்த விமானத்தில் 48 சிறுவர்கள் இருந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏதென்ஸ் நகரத்தை விமானம் நெருங்கியதும் 'விமானத்தில் திடீரென்று ஒரு பிரச்சினை ஏற்பட்டுள்ளது' என்று விமானி ஏதென்ஸ் நாட்டு விமானக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து 'விர்' என்று புறப்பட்ட இரண்டு போர் விமானங்கள் இந்த பயணிகள் விமானத்தின் இருபுறமாகவும் பறந்தன. அப்போது பயணிகளின் விமானத்தில் அசாதாரணமான நிலை காணப்பட்டது என்றும், விமான ஓட்டிகள் எவரும் விமானத்தின் ஓட்டி அறையில் காணப்படவில்லை எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. ஓட்டிகள் இல்லாத விமானம் சில கணங்களிலேயே கீழ் நோக்கிப் பறந்து விழுந்து நொறுங்கி விட்டது.

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி விமானத்தின் கறுப்புப் பெட்டி கிடைத்துள்ளது. அத்தோடு விமான ஓட்டிகளில் ஒருவர் விமானம் விழுவதற்கு முன்பாகவே பிராண வாயு (ஓட்சிசன்) இல்லாமல் நினைவு இழந்துள்ளார் என்று தெரியவந்துள்ளது. இறுதியான தகவலின் படி இந்த விமான விபத்துக்கு காரணம் விமானத்தின் விமான ஓட்டி அறையில் பிராணவாயு இல்லாத கோளாறு ஏற்பட்டதே என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# வீட்டு இலக்கம் "8" எப்படி?

அடிப்படையில் இவற்றிற்கு சக்தி, குணம், தன்மை இப்படி பல அடிப்படையின் இலக்கங்களை வகுப்பது, வகைபடுத்துவது எவ்வளவு தூரம் நியாயமாகும்?.

மறைந்த எனது தந்தையார் சிவஸ்ரீ இலி. கு. சிவஞானச் செல்வக்குருக்கள் அவர்களிடம், இந்த எண் சோதிடத்தின் தன்மையினை பேச முனைந்தபோது, அவர் எனக்கு கூறுயதாவது "எண் சோதிடத்தில் உலகத்தில் பிறந்த மக்களை ஆகமொத்தம் ஒன்பது பிரிவுகளில் தான் அடக்கமுடிகிறது என்றால் உலகமக்களிடம் ஆக மொத்தம் ஒன்பது குணங்கள் மட்டுமே அடங்கியிருக்க வேண்டுமே? ஆனால் அப்படியில்லையே? எண்களின் உபயோகத்தினால் கணிக்கப்படும் அகத்தியர் அருளிய சோதிடக்கலை மூலம் பலகோடி குணங்களை கொண்ட மனிதர்களை குறிக்கமுடிகிறது, அறியமுடிகிறது என்றார்."

திகதி என்பது நாட்களை அளக்கின்ற ஓர் அளவுகோலே அன்றி, குணாதியம் கொண்டது என்பது பொருத்தமில்லை என்று தெரிந்திருந்தாலும், ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் வளர்க்கப்பட்ட பிறப்பெண்ணையும், பெயர் எண்ணையும் உண்மை என்று ஏற்றுக் கொண்டால்? எண்அடிப்படையில் அமைக்கப்பட்ட பெயருடையவர்கள் அனைவரும் இன்று அனைத்திலும் மேலோங்கியிருந்திருக்க வேண்டுமே? என்று கூறுமளவிற்கு நான் ஆய்வு செய்த விடயங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

| | |
|---|---|
| 8 = | 8 |
| 8+8 = 16 =1+6 = | 7 |
| 8+8+8=24 = 2+4 = | 6 |
| 8+8+8+8=32 =3+2 = | 5 |
| 8+8+8+8+8=40 =4+0 = | 4 |
| 8+8+8+8+8+8=48 4+8 =12 =1+2 = | 3 |
| 7X8=56 =11 =1+1 = | 2 |
| 8X8=64 =10 =1+0 = | 1 |
| 9X8=72 =9 =9+0 =9 | |
| 10X8=80 =8 =8+0 =8 | |

எட்டின் கூட்டுத்தொகை அல்லது எட்டின் பெருக்கங்கள் வரிக்கிரமமாக ஒன்றிலிருந்து ஒன்பதுவரை அனைத்து இலக்கங்களையும் தோற்றுவிக்கும் அழகிய பண்பு இலக்கம் ஒன்றிற்கும் எட்டிற்கும் மட்டுமே காணப்படுகிறது. இப்பிரிவில் ஐந்தையும் சேர்த்துக்கொள்ளலாம். கணிதத்தில் இவ்வளவு அழகுபடைத்த எட்டினை மேலும் எட்டி எட்டிப் பார்ப்போமே!

செல்வங்கள் எட்டு. இதைத்தான் அஷ்ட் லக்சுமிகளாக வழிபடுகிறோம். அப்படியென்றால் வழிபடத்தகுதியுடைய எண்ணும் எட்டாகிறதே. அடேங்கப்பா! என்னே சிறப்பு! எட்டை வேண்டாம் என்றால் செல்வத்தை வேண்டாம் என்றல்லவா பொருள். இந்துசமயத்துக் குரு மார் தாங்கள் எவரையேனும் வாழ்த்தும் போதோ, ஆசீர்வதிக்கும் போதோ எட்டு ஐஸ்வர்யங்களும் பெற்றுப் பெருவாழ்வு பெற வேண்டும் என்றுதான் வாழ்த்துகிறார்கள் என்றால் இலக்கம் எட்டிற்கு சிறப்பு இல்லாமலா என்ன?

உலக இயக்கத்தின் முழுமுதற்கடவுள் சிவபிரானை சக்தி மயப்படுத்திக்காட்ட வரையப்படும் இயந்திரத்தில் எண்கோணங்கள் அமைந்து காணப்படுகிறது. மேலும் சிவபெருமானை குறிப்பிடுகையில்

1. தன்வயத்தனாதல்
2. தூய உடம்பினனாதல்
3. இயற்கை உணர்வினனாதல்
4. முற்றும் உணர்தல்
5. இயல்பாக பாசங்களில் இருந்து நீங்குதல்
6. பேரருள் உடைமை
7. வரம்பில் இன்பம் உடைமை
8. முடிவில்லா ஆற்றல் உடைமை

என்று விசேடமாக எட்டுக்குணங்களை உடையவன் என்பதனால் தனித்துவமாக "எண் குணத்தான்" என்ற பெயரோடும் சிவன் புகழுடையவனாகின்றார்.

இப்படியே விநாயகப்பெருமானையும்

1. ஆதி கணபதி 2. மகா கணபதி
3. நடன கணபதி 4. சக்தி கணபதி
5. வால கணபதி 6. உச்சிஸ்ட கணபதி
7. உக்ர கணபதி 8. மூல கணபதி

என்று இலக்கம் எட்டிற்கு பெருமை தரும் வகையில் விநாயகப்பெருமானும் அஷ்ட கணபதியாகத் திகழ்கிறார்.

செல்வத்திற்கு அதிபதியான லக்சுமியின் "ஸ்ரீ லக்சுமி குபேர தனாகர்ஷணயந்திரத்தில் எட்டுதாமரை இதழ்களும், 16, 32 என்று மொத்தமாக 8X8 - 64 இதழ்களும், கிரஹ லக்சுமியின் ரூபமான வாஸ்து இயந்திரத்தில் (வீட்டுக்கான முக்கிய இயந்திரம்) எட்டுத் தாமரை (8) இதழ்களும், மாபெரும் சக்தி வாய்ந்த பரதேவதையின் இயந்திரத்தில் 8, 8+8, தாமரை இதழ்களுடன், எட்டுகோணங்களும், எட்டுத்தளங்களும் என்று எட்டான வடிவங்கள் எட்ட, எட்டிட முடியாமல் காணப்படுகிறது. இவற்றோடு தேவியின் பெருமைகளைக்கூறும் சௌந்தர்யலகரி பாஷ்யத்தில்

விசாலா கல்யாணி ஸ்புட - ருசி - ரயோத்யா குவலயை:
கிருபா தாராதாரா கிமபி மதுரா S S போக வதிகா -
அவந்தீ த்ருஷ்டிஸ்தே பஹு விஸ்தார - விஜயா
த்ருவம் தத்தந்நாம - வ்யவஹரண - யோக்யா விஜயதே"

## சிவ சர்மா

என்ற சுலோகத்தின் மூலம் தேவியிடம் காணப்படும் எட்டுவிதமான திருஷ்டிகளையும் அதாவது

1. (விசா) விசாலமாகவும்
2. (கல்யாணி) மங்களகரமாகவும்
3. (ஸ்புடருகி:) மலர்ந்து பிரகாசிப்பதாகவும்
4. (குவலயை:) கருநெய்தல்களால் (அயோத்தா) வெல்லமுடியாத அழகு வாய்ந்ததும்
5. (க்ருபா தாராதாரா) கருணைப் பெருக்கிற்கு ஆதாரமாகவும்
6. (கிம்பி மதுரா) வர்ணிக்கமுடியாத இனிமையுடன் கூடியதாகவும்
7. (ஆபோக வதிகா) ஆழங்காண முடியாததாகவும்
8. (அவந்தீ) ரசிப்பதாகவும்

கொண்டவளான தேவி, மேலும்

"சிவே ச்ருங்காராரார்த்ரா ததிதரஜனே குத்ஸனபரா
ஸரோஷா கங்காயாம் கிரிசசரிதே விஸ்மயவதீ
ஹரா ஹிப்போ பீதா ஸரஸிருஹ - ஸௌபாக்கிய ஜனனீ
ஸகீ ஷி ஸ்மேரா தே மயி ஜனனி திருஷ்டி: ஸகருணா"

என்ற சுலோகத்தின் மூலம்

1. (சிவே) சிவனிடத்தில் (தே) உன்னுடைய (த்ருஷ்டி) பார்வை ச்ருங்கார - ஆர்த்ரா) காதலின் கசிவுள்ளதாகவும்
2. (தத் இதர ஜனே) அவரைத்தவிர மற்றவர்களிடத்தில் (குத்ஸன - பரா) அருவருப்புடையதாகவும்
3. (கங்காயாம்) கங்காதேவியிடம் (ஸரோஷா) கோபத்துடன் கூடியதாகவும்
4. (கிரிச-சரிதே) சிவனுடைய லீலைகளிலில் (விஸ்மயவதீ) வியப்புடையதாகவும்
5. (ஹர-அஹிப்ய:) சிவன் அணியும் பாம்புகளிடம் (பீதா) பயம் உடையதாகவும்
6. (ஸரஸிருஹ - ஸௌபாக்ய - ஜனனீ) தாமரையின் அழகுக்கும் அழகு செய்வது போல் சற்று சிவந்திருப்பதால் வீரரஸம் உடையதாகவும்
7. (ஸகீஷி) தோழிகளிடத்தில் (ஸ்மேரா) ஹாஸ்ய ரஸம் உடையதாகவும்
8. (மயி) என்னிடத்தில் (ஸகருணா) கருணையுடன் கூடியதாகவும்

தேவியானவள் தன் பார்வையில் இவ்வாறான எட்டு ரஸங்களைக் கொண்டவள் என்று பெருமைகொள்கிறார். இதனால்தான் தேவியின் பார்வை ஸர்வஜன வச்யம் படைத்தது என்று பொருள்.

இன்னும் இந்து சமயத்தோடு பின்னிப் பிணைகையில் கோயிலில் குடிகொள்ளும் விக்ரகங்களை பிரதிஸ்டை செய்யும்போது பயன் படுத்தப்படும் ஒரு சிறந்த மெழுகுப்பதார்த்தம் "அஷ்டபந்தனம்" எனப்படுகிறது. ஏனென்றால் இப்பதார்த்தம்

1. சுக்கான் கல் 2. கொம்பரக்கு
3. சாதிலிங்கம் 4. செம்பஞ்சு
5. தேன்மெழுகு 6. எருமை வெண்ணெய்
7. நற்காவி 8. குங்குலியம்

என்ற எட்டு பொருட்களை சேர்த்த விசேட கலவையாகிறது.

இதற்கு மேலும் சமயத்துள் பொதிந்துள்ள எட்டானது மேலும் உலகில் பல துறைகளிலும் விளங்கிக் காணப்படுவதை அவதானிக்கையில்:

தாதுப்பொருட்கள் எட்டு, இதைத்தான் அஷ்ட தாதுப்பொருட்கள் என்கிறோம். (எண்வகை உலோகங்கள்)

1. பொன் 2. வெள்ளி 3. செம்பு
4. இரும்பு 5. வெண்கலம் 6. தரா
7. வங்கம் 8. துத்தநாகம்

பெருமை மிக்க எட்டு, மேலும் மலர்களாக

1. புன்னை 2. வெள்ளெருக்கு
3. செண்பகம் 4. நந்தியாவர்த்தனம்
5. நீலோற்பலம் 6. பாதிரி
7. அலரி 8. செந்தாமரை

என்று "அஷ்ட பூக்களாகவும்"

வீட்டில் நிறைந்திருக்க வேண்டிய மங்கலப் பொருட்களாக

1. கண்ணாடி 2. நிறைகுடம் 3. கொடி
4. சாமரம் 5. தோட்டி 6. முரசு
7. விளக்கு 8. புராணம்

என்ற அஷ்ட மங்கலப்பொருட்களும் (எனது தந்தையார் வீடு குடிபுகும் வைபவங்களுக்கு இம்மங்கலப்பொருட்களைச் சேர்த்துக்கொள்வது வழக்கம்) எட்டின் பெருமைக்கு எடுத்துக் காட்டுக்களாகவுள்ளன.

மேலும் சுகங்கள் எட்டு, இதை அஷ்டபோகம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது மனிதனால் அனுபவிக்கப்படும் எட்டுவகையான போகங்கள்

1. பெண்/ஆண் 2. ஆடை
3. அணிகலன்கள் 4. போசனம்
5. தாம்பூலம் 6. பரிமளம்
7. பாட்டு 8. பூவமளி

இவ்வாறு சித்திகள் எட்டு (அஷ்டசித்திகள்)

1. அணிமா 2. மகிமா 3. கரிமா
4. லகிமா 5. பிராப்தி 6. பிராகாமியம்
7. ஈசத்துவம் 8. வசித்துவம்

திருமணங்கள் எட்டு (அஷ்ட மணங்கள்)

1. பிரமம் 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம்
4. தெய்வம் 5. காந்தருபம் 6. ஆசுரம்
7. இராக்கதம் 8. பைசாசம்

ஐசுவரியங்கள் எட்டு. வேதமந்திரங்கள் மூலம் பிராமணர்களாலும், மற்று தவசிகளாலும் வழங்கப்படும் ஆசியும், வாழ்த்தும் இந்த எட்டு ஐசுவரியங்களும் கிடைக்கப்பெற வேண்டும் என்று தானே! அவை

1. தனம் 2. தான்யம் 3. நிதி
4. பசு 5. புத்திரர் 6. வாகனம்
7. தைர்யம் 8. சத்தம்

மனிதனுக்கு இருக்கவேண்டிய தனங்கள் எட்டு "அஷ்டதனங்கள்"

1. ஆயுள் 2. அழகு 3. தனம்
4. சம்பத்து 5. குலம் 6. வித்தை
7. குணம் 8. விவேகம்

ஆயுள்வேத வைத்தியப் பரிசோதனைகள் எட்டு

1. நாடிகளை சோதித்து அறிதல்
2. ஸ்பரீசித்து அறிதல் 3. உருபம்
4. சத்தம் 5. நேத்திரக்குறி 6. மூத்திரக்குறி
7. நாவின் குறி 8. மலக்குறி

ஆயுள்வேத வைத்தியத்தினால் நோயின் மூலத்திற்கு வழங்கப்படும் சக்திவாய்ந்த சூரணக்கலவை எட்டு; (மருந்துப்பொருள்) அஷ்டவர்க்கம் என்று அழைக்கப்படுகிறது.

1. சீரகம் 2. கருஞ்சீரகம் 3. சுக்கு
4. மிளகு 5. திப்லி 6. இந்துப்பூ
7. பெருங்காயம் 8. ஓமம்

தாவரப்பிரிவுகள் எட்டு

1. நெல் 2. புல் 3. வரகு
4. தினை 5. சாமை 6. இறுங்கு
7. துவரை 8. இராகி

தமிழ் - எட்டுத்தொகையை எண்தொகை என்கிறோம்

1. நற்றினை 2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு 4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல் 6. கலித்தொகை
7. அகநானூறு 8. புற நானூறு

எண்சுவைத்தமிழ்

1. சிங்காரம் 2. வீரியம் 3. பெருநகை
4. கருணை 5. ரவுத்ரம் 6. குற்செய்
7. அற்புதம் 8. பயம்

கணிதங்கள் எட்டு; அஷ்ட கணிதமெனப்படுகிறது

1. கணமூலம் 2. கணம் 3. குணனம்
4. சங்கலிதம் 5. பாகாரம் 6. வர்க்கமூலம்
7. வர்க்கம் 8. விபகலிதம்

திசைகள் எட்டு - விஞ்ஞானத்தால் கருதப்பட்ட எண்திசையானது இந்து சமயத்துள்ளும் எட்டுத்திசைகளை காவல்புரியும் தெய்வங்களை அஷ்டதிக்குப்பாலகர்கள் என்று போற்றப்படுவதன் மூலம் எண்திசையானது மேலும் சமயத்தூடும் உறுதிப்படுத்தப்படுகிறது.

உடலின் அளவுகோல் எட்டு. இதைத்தான் எண்சாண் உடம்பு என்கிறோம். வினோதமான படைப்பாக அவரவரது உடல் அவரவர் எட்டு கைச்சாண்களில் அடங்கியிருக்கிறது.

அபூர்வமாக பிறக்கும் பிரசித்தி பெற்ற மனிதர்களில் அட்டவதானிகள் அடங்குவர். இவர்கள் ஒரேசமயத்தில் எட்டு அவதானங்களை ஏற்படுத்தக்கூடியவர்கள் என்பதால் புகழ்ந்து பேசப்படுபவர்களே அன்றி எட்டு அவதானமுடையவர்கள் என்பதால் இகழப்பட்டவர்கள் அல்ல.

இவ்வாறு எட்டின் பெருமையை விஞ்ஞானம், மெஞ்ஞானம், சமயம், வாழ்க்கை, குணம், வைத்தியம், பூமி, வீடு, கணிதம், மனிதன், பயிர், உலோகம், மொழி என்று எத்தனையோ பிரிவுகளில் கண்டபோதும் இலக்கம் எட்டினை எட்டுவதா இல்லை தட்டுவதா?




எட்டா?, எட்டா? என்று கேட்டவர்கள் எட்டிற்கான சிறப்புக்களை ஆய்ந்து பார்க்க முனைகையில் அதற்கான தன்மையினை எட்டா, எட்டா என்று எட்டிட முடியாத நிலையில் ஆய்வு நீடிப்பதை


தொடர்ச்சி 17ம் பக்கம்


## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்




Kanthan: 416.291.3997





• No Spraying • No Smelling • No Moving

## ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880

# என்ன மச்சான்! எப்பிடி சுகம்?

சில வாரங்களுக்கு முன் ஒரு தொலைபேசி அழைப்பு. அழைத்தவர் விளம்பரம் பத்திரிகையின் வாசகர். நீங்களும் மதி அழகனும் தமிழ் வானொலி நிகழ்ச்சிகளை தரம் குறைந்துவிட்டதாக எழுதி வருகின்றீர்கள். அப்படி என்ன பிழை நிகழ்ச்சிகளில்? கேட்க நல்லாத்தானே இருக்கு என்று கூறி நிறுத்தினார். அப்படியா? நீங்கள் எப்படியான நிகழ்ச்சிகளைக் கேட்கிறீர்கள்? இது எனது கேள்வி. வீட்டில் உள்ள றேடியோவில் வீட்டில நிக்கேக்குள்ளேயும் வேலையாக Truck ஓடுறனான். அனேகமாக றோட்டில தான் நிற்கிறனான். அதனால் Truckகுள்ளேயும் கேட்கிறனான். எப்படி நிகழ்ச்சிகள்? இது எனது கேள்வி. நல்ல முசுப்பாத்தியாகப் போகும். சில அறிவிப்பாளர்களின் பெயர்களை சொல்லி இவையோட எல்லாம் நேரம் போகாமல் இருக்கேக்குள்ள தொலைபேசியில் கதைத்து பகிடி விடுகிறனான். அவைக்கும் நல்லாப் பிடிக்கும். அவையும் அப்பிடியே பகிடி விட்டு கதைப்பினம். பொழுது போவதற்கு தானே வானொலி இருக்கு என்று சொல்லி நிறுத்தினார். அது சரி; விளம்பரம் படிக்க உங்களுக்கு எப்படி நேரம் கிடைக்குது? நான் நீண்ட தூரம் ஓடுறனான். உள்ள இலவசப் பத்திரிகை எல்லாம் அள்ளிப் போட்டுக் கொண்டு போய் U.S இல் Wait பண்ணி கொண்டு இருக்கேக்குள்ள வாசிக்கிறனான். அழைத்தவர் இப்படி பல தடவை விளம்பரம் பத்திரிகையில் வரும் கட்டுரைகள் பற்றி தொலைபேசியில் அழைத்து உரையாடுவார். அவரது ரசனை பற்றியும், வாசிப்பதில் உள்ள ஆர்வம் பற்றியும் தெரிந்து இருந்ததனால், எம்மிடையே வாழுகின்ற வெழுத்ததெல்லாம் பால் என்று எண்ணுகின்ற பெரும்பான்மை தமிழ் மக்களில் அவரும் ஒருவர் என்று தெளிவாக தெரிந்தது. அவர்களுக்கு சில விடயங்களை தெரியப்படுத்துவது முக்கிய கடமையாகும். ஏனெனில் தமிழ் வானொலி நிகழ்ச்சிகளின் தரம் குறைவதற்கு இவர் போன்ற வானொலி நேயர்களும் காரணமாகின்றார்கள் என்பதை நாம் அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

பலரிடம் McDonalds இல் வேலை செய்யலாமே என்று கேட்டால் அதுவும் ஒரு வேலையா, சும்மா Burger ஐ சுட்டு Sauce ஐ ஊற்றி இலைகுழையை கொஞ்சம் போட்டு Bun ற்குள் வைத்து குடுக்கிறது தானே என்று சர்வ சாதாரணமாக கூறுவார்கள். ஆனால் அந்த Mc Donalds Burger ஐ உலகின் எந்தப் பாகத்தில் வாங்கி உண்டாலும் அதன் சுவை இது McDonalds Burger என்று சொல்லக் கூடியதாகத் தான் இருக்கும். அதன் காரணம் சமையல் என்பது ஒரு கலை. அந்தக்கலையை McDonalds நிறுவனம் தமக்குத் தேவையான வகையில் ஒரு விதிமுறையை வகுத்து தமது Burger உணவை இப்படித்தான் தயாரிக்க வேண்டும் என்று ஒரு வரையறைக்குள் வைத்துக்கொண்டு வேலை செய்பவர்களை அந்த வரையறைக்குள் பயிற்றுவிக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் அந்த வரையறைகள், கட்டுப்பாடுக்குள் தான் வேலை செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கின்றார்கள். அப்படி உலகமெங்கும் கடைப்பிடிக்கப்படு கின்றது. அதனால்தான் சுவை மாறாமல் எமக்குக் கிடைக்கின்றது. அதே வேளை McDonalds இல் Burger மாத்திரம் தான் உணவு என்று கூறி விடவும் முடியாது. பலவித உணவுகள் பல சுவைகளுடன் கிடைக்கின்றன. அப்படியாயின் அவர்கள் எவ்வளவு கட்டுப்பாடுகள் விதிகளுக்கிடையில் தொழில் புரிகின்றார்கள் என்பது எமக்கு விளங்கும். முதலில் சொன்ன McDonalds இல் வேலை செய்வது எப்படியென்று விவரித்தவர்கள் போக்கில் Burger செய்ய வைத்தால் Mcdonalds இன் Burger என்ன சுவையுடன் எமக்கு கிடைக்கும் என்பதையும் நாம் கற்பனை பண்ணிக் கொள்ளலாம். அதே கதிதான் தமிழ் வானொலி நிகழ்ச்சிகளின் நிலையும்.



இலங்கை வானொலியில் K.S நடராஜா என்று ஒரு பெரியவர் நிகழ்ச்சிகளின் கட்டுப்பாட்டாளர் என்ற பொறுப்பான பதவியை வகித்து வந்தார். புகழ்பெற்ற அறிவிப்பாளர்கள் கூட தமது நிகழ்ச்சிகள், தமிழ் உச்சரிப்புக்கள், அறிவிப்பு போன்றவற்றில் என்ன என்ன பிழைகள் பிடிப்பாரோ என்று ஒரு பாடசாலையின் அதிபரைக் கண்டு பயம் கொள்ளும் மாணவர்களைப் போல K.S நடராஜாவைப் பற்றி பயந்ததாக கூறக் கேள்விப்பட்டதுண்டு. அவர் அப்படி பொறுப்பாக நடந்து பல அறிவிப்பாளர்கள், தயாரிப்பாளர்களை சரியான வழியில் வழி நடத்தி சென்றதுதான் இலங்கை வானொலியின் வெற்றியின் இரகசியம் என்று கூறலாம். இன்றைய காலகட்டத்தில் அறிவிப்புக் கலையை பயில வேண்டும் என்றோ, போதிய பயிற்சி எடுக்கவேண்டும் என்றோ யாரும் கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை. அதன் தரத்தை பற்றி வானொலி அதிபர்கள் கவலை கொள்வதாகவும் தெரியவில்லை. இலங்கை வானொலியில் அரச சம்பளத்துடன் தொழில் செய்ததனால் அவர்களது திறமையை வளர்த்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இங்கு ஆர்வமுள்ளவர்கள், நட்சத்திர அந்தஸ்தை பிடித்துவிட துடிப்பவர்கள் என்று பலபேர் இலவசமாக, பெயருக்காக மட்டும் அறிவிப்பாளர்களாக இருப்பவர்களை வானொலி அதிபர்கள் எப்படிக் கட்டுப்படுத்துவது? பாவத்திற்கு இரங்கி கொடுத்த மாட்டை பல்லைப் பிடித்து பார்த்த கதையாகவும் முடித்துவிடக்கூடாது. விளம்பரம் செய்வபர் களிடம் பணத்தை வசூலித்து அறிவிப்பாளர் களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று சில வானொலி அதிபர்களுக்கு மனம் இருந்தும் விளம்பர பணத்தை வசூலிப்தென்பது கல்லில் நார் உரித்த கதையாகத்தான் இருக்கின்றது.

இலங்கை வானொலி பிரபலமாக இருந்த காலங்களில் இப்போது போன்று தொலைபேசி வசதிகள் இருந்ததில்லை. வானொலியில் தமது பெயரைக் கேட்க வேண்டும் என்ற விருப்பமுடையவர்கள் ஒரு தபால் அட்டையில் தமது நண்பர்கள், உறவினர்களின் பெயர்களை எழுதி அனுப்பிவைத்தால் பொங்கும் பூம்புனல் நிகழ்ச்சியில் ஆரம்பித்து இரவின் மடியில் நிகழ்ச்சிவரை அவர்களது பெயர்களை வேவ்வேறு நிகழ்ச்சிகளில் அறிவித்து பல பாடல்களை ஒலிபரப்பப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பாடல்களும் நல்ல கவித்துவமும் இசை நயமும் கொண்டவையாக இருக்கும். நிகழ்ச்சிகளும் ஆரம்பித்து முடியும் வரை கேட்கக்கூடிய வகையில் சீராக தரமாக இருக்கும். இங்கு தொலைபேசியில் முதல் நேயர் ஒரு காதல் பாட்டு கேட்பார். இரண்டாவது நேயர் துள்ளல் பாட்டு, மூன்றாவது நேயர் சோகப்பாட்டு, நான்காவது நேயர் கும்மாங்கூத்துப்பாட்டு, ஐந்தாவது நேயர் தத்துவப்பாடல் என்று நிகழ்ச்சியே சாம்பாராக இருக்கும். அதற்குள் இடையிடையே சம்பாஷனைகள் வேறு. அறிவிப்பாளர்களும் புறப்பட்டு விட்ட பஸ்ஸினை ஓடிச்சென்றுதான் பிடிக்கவேண்டும் என்பது போல மிக வேகமாக ஏதோ போட்டியில் பங்குபற்றுவது போல கொச்சை தமிழில் பேசிக்கொண்டே போவார்கள். இது அரை மணிநேர நிகழ்ச்சியாக இருக்கும். முன்பு வானொலியில் பெயரை மட்டும் கேட்டு புழகாங்கிதம் அடைந்தவர்களுக்கு இன்று வானொலி அறிவிப்பாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு அறிமுகப்படுத்தி கொண்டு வானொலி நேயர்கள் இரசிகர்கள் என்ற உறவு மாறி வானொலி நண்பர்கள் என்ற ஓர் உறவு ஆரம்பித்திருக்கின்ற காலம் இது. காலப்போக்கில் என்ன மச்சான்! எப்பிடி சுகம்? என்று அளவளாவிக் கொள்ளும் அளவிற்கு தமிழ் வானொலி நிகழ்ச்சிகள் வந்து விடுமோ என்று பயம் தோன்றுகிறது.

போட்டி நிகழ்ச்சிகள் கூட அறிவு பூர்வமாக இருப்பதாக தெரியவில்லை. அல்லது அதிமேதாவித்தனம் தலை தூக்கி நிற்கும்.

இவை எல்லாவற்றிற்கும் காரணமே, வானொலி நிகழ்ச்சிகளை Burger செய்வது எப்படி என்று கூறியவர்கள் போன்ற பலர் நிகழ்ச்சிகள் செய்ய முற்பட்டதுதான். அவர்களுக்கு மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று எண்ணத் தோன்றுவதில்லை. வானொலி நிகழ்ச்சிகளை பல விதமான துறைகளிலும் அறிவு, ஆற்றல் உள்ளவர்கள் கேட்கின்றார்கள் என்று சிந்திப்பதில்லை. அண்மையில் ஒரு பேட்டி நிகழ்ச்சி. அதில் கலந்து கொண்ட முன்னாள் அறிவிப்பாளர் ஒருவர் பல வானொலிகள் உருவாகி தரமான நிகழ்ச்சிகள் இல்லாமல் போய்விட்டதே என்று அங்கலாய்த்தார். செவ்வி கண்ட அறிவிப்பாளர் கூறுகிறார் "பல வானொலிகள் இருந்தால்தான் போட்டியினால் முன்னேற்றம் உண்டாகும். அதுவும் விளையாட்டுத்துறை போல" என்று ஒப்பிடுகின்றார். எப்படி இருக்கின்றது? வானொலி அறிவிப்பு என்பது ஒரு கலை என்று அவருக்கு தெரியாது. அவர் எப்படி அறிவிப்பாளராகி இருப்பார்? வானொலி அதிபருக்கு வேண்டியவராக இருந்து இருப்பார்.

அண்மையில் இரவு வானொலியில் ஒரு போட்டி நிகழ்ச்சி. T.M.S., P. சுசீலா அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்கு $100.00 டொலர் பெறுமதியான VIP நுழைவுச்சீட்டுப் பரிசு. போட்டி என்னவெனில் T.M.S குரலில் வெளிவந்த இரண்டு பாடல்களை ஒலிபரப்பி இந்த பாடல்கள் எந்த கதாநாயகர்களுக்காக பாடப்பட்டது என்பதுதான் கேள்வி. (இன்றைய காலத்தில் பாடல் என்ன, யார் வசனம் பேசுகிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியாதே. எல்லாம் இரவல் குரல்) பலர் அடுத்தடுத்து வந்து M.G.R, சிவாஜி என்று பதில் கூறிக்கொண்டே போனார்கள். அவர்களுக்கு T.M.S பாடிய பாடல்கள் M.G.R அல்லது சிவாஜிக்காக மட்டும் தான் என்று எண்ணி இருந்திருக்கலாம். அல்லது VIP நுழைவுச்சீட்டை, குருடன் மனைவிக்கு அடித்த கதையாக தட்டிச் செல்லலாம் என்ற நப்பாசையாகவும் இருந்திருக்கலாம். நிகழ்ச்சியை சுவாரசியமாக்க வேண்டுமென்றே ஜெய்சங்கர், ரவிச்சந்திரனுக்காக பாடப்பட்ட பாடல்களையே தெரிவு செய்திருந்தேன். அரைமணி நேரத்தில் 40 இற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களில் ஒருவர் மட்டுமே கூறினார்; தான் ஒலிபரப்பப்பட்ட பாடல்கள் இடம்பெற்ற திரைப்படங்களை பார்த்ததில்லை என்றும், T.M.S அவர்கள் பாடும் பாணியை அவதானித்தால் முதலாவது பாடலை ஜெய்சங்கருக்கும் இரண்டாவது பாடலை ரவிச்சந்திரனுக்கும் பாடி இருப்பார் போலும் என்று எண்ணுவதாக கூறி விடையை சரியாகச் சொன்னார். இதில் இருந்து அறிவிப்பாளர்களும் வானொலி தயாரிப்பாளர்களும் உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவெனில் எமது தயாரிப்புக்களை விடையை சரியாக கூறிய அந்த ஒருவரை மனதில் வைத்துக் கொண்டு தயாரிக்க வேண்டும் என்பதே. அப்படிப்பட்ட அறிவுபூர்வமான நேயர்கள் எம்மை மடையர்கள் என்று எண்ணி விடக்கூடாது.

சகவானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கும் அறிவிப்பாளர்களுக்கும் ஒரு பணிவான வேண்டுகோள் எமது தாய் மொழி தமிழ் வாழ வேண்டுமாயின் வானொலிகளின் பங்களிப்பே முதன்மையாக விளங்குகின்றதென்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். அறிவிப்பு என்ற பெயரில் கொச்சைத் தமிழ் பேசுவதை நிறுத்தி தரமாக தமிழ் பேச எமது பங்களிப்பைச் செய்வோம். இது ஒரு விமர்சனமே. அறிவிப்பாளர்களை நையாண்டி செய்வதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு, சரியான பாதையிலே செல்வோம். இம்மனப்பக்குவம் எமக்கு இல்லை யெனின் தமிழைத் தொடர்ந்தும் கொலை செய்யாமல் பணிவுடன் ஒதுங்கி விடுவோம். அதுதான் தமிழ் வாழ வழிவகுக்கும். நன்றி.

பார்வைகள் தொடரும்

ராம்ஜி

ஒரு சாதாரண மனிதன்




உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா? நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

ராம்ஜி - 416.230.1107

PARAM. G GNANASWARAN
Sales Representative

HOME LIFE GTA REALTY INC.
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON

HOMELIFE HIGHER STANDARDS

416.321.6969
905.670.9969
(Mississauga)
paramg@themathuram.com

# விளையாட்டுச் செய்திகள்

## இந்தியாவின் தோல்வியின் காரணம் என்ன?

இலங்கையில் நடைபெற்ற முத்தரப்பு துடுப்பாட்ட போட்டியில் இந்தியா தோல்வியுற்றதற்கு முக்கிய காரணம் வீரர்களின் துடுப்பாட்டத் திறமையின்மையே. வழக்கமாக துடுப்பாட்டத் தில் கொடிகட்டிப் பறக்கும் இந்திய வீரர்கள் தற்போது அதிலும் சோடை போயுள்ளது துடுப்பாட்ட ரசிகர்களுக்கு மேலும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒருவர்கூட சராசரியாக 50 ஓட்டங்களைப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதிகபட்சமாக யுவ்ராஜ் சிங் 48 சராசரி ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவரைத் தொடர்ந்து அணித்தலைவர் ராகுல் திராவிட் 46.25 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவர் இத்தொடரில் 3 அரைசதங்களை அடித்துள்ளது குறிப்பிடத்தக்கது. யுவ்ராஜ் சிங் மொத்தம் 192 ஓட்டங்களைக் குவித்து இந்திய துடுப்பாட்டப் பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளார்.

ஜயவர்தனே: அதேசமயம் இலங்கை தரப்பில் மஹேல ஜயவர்தனே, 230 ஓட்டங்களைக் குவித்து ஒட்டுமொத்தமாக முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவரது சராசரி ஓட்டங்கள் 57.50 ஆகும். என்றாலும் ஜயசூர்யா இருபோட்டிகளில் விளையாடாத நிலையிலும் சராசரியாக 66.50 ஓட்டங்களைக் குவித்து அணிக்கு சிறப்பு சேர்த்துள்ளார்.

நெஹ்ரா: பந்து வீச்சைப் பொறுத்தவரை இந்தியாவின் ஆஷிஸ் நெஹ்ரா அதிகபட்சமாக 12 விக்கெட்டுகளைக் கைப்பற்றி முதலிடம் பெற்றுள்ளார். என்றாலும் ஒரு விக்கெட்டுக்காக அவர் விட்டுக்கொடுத்துள்ள ஓட்டங்கள் 16.50 ஆகும். இலங்கை அணிக்கு எதிரான இறுதி ஆட்டத்தில் 59 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதே அவருக்கு சிறப்பான வீச்சாக உள்ளது. அடுத்தபடியாக, பதான் ஆறு விக்கெட்டுக்களையும் (33.83 சராசரி0, ஹர்பஜன் சிங் ஐந்து விக்கெட்டுகளையும் (31.40 சராசரி) கைப்பற்றியுள்ளனர்.

இலங்கை தரப்பில் முரளிதரன் அதிகபட்சமாக எட்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். அவரது சராசரி 18.12 ஆகும். அடுத்து திலகரத்னே தில்ஷான் ஆறு விக்கெட்டுகளை யும் (18 சராசரி), மஹ்ரூப் ஐந்து விக்கெட்டு களையும் (34.20 சராசரி) கைப்பற்றியுள்ளனர்.

## சந்தேகம்! ஒரு சந்தேகம் !!

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே பரபரப்பாக நடந்து முடிந்த ரெஸ்ற் போட்டியில், கடைசி ஆட்டக்காரரான காஸ்பரோவிச்சுக்கு ஆட அனுமதிக்காதது குறித்து அவுஸ்திரேலிய பத்திரிகைகள் சந்தேகம் எழுப்பியுள்ளன. இரண்டாவது இன்னிங்ஸில் எட்டுவிக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்கள் என்ற நிலையில் அவுஸ்திரேலியா ஆட்டத்தைத் தொடங்கியது. பந்துவீச்சாளர்கள் ஷேன் வார்னே, பிரெட் லீ, காஸ்பரோவிச் ஆகியோர் மிகச் சிறப்பாக விளையாடினார். இங்கிலாந்து பந்துவீச்சாளர்களுக்கு அச்சம் தந்தனர். வார்னேயும் பிரெட் லீயும் சேர்ந்து ஒன்பதாவது விக்கெட்டுக்கு 56 ஓட்டங்களும் கடைசி விக்கெட்டுக்கு காஸ்பரோவிச்சும் பிரெட் லீயும் 59 ஓட்டங்களும் குவித்தனர். வெற்றிக்கு 3 ஓட்டங்களே தேவை என்ற நிலையில், ஹார்மிசன் பந்தில் விக்கெட் காப்பாளர் ஜோன்ஸிடம் காட்ச் (Catch) கொடுத்து காஸ்பரோவிச் ஆட்டமிழந்தார். ஆனால் ரிவி ரீப்ளேக்களைப் (Replay) பார்க்கும்போது, காஸ்பரோவிச்சின் வலது கையுறையில் பந்து பட்டபோது, துடுப்பை அவர் பிடித்திருக்கவில்லை என்பது தெரிந்தது. இதை வைத்துக்கொண்டு அவுஸ்திரேலிய பத்திரிகைகள் தங்கள் அணிக்கு சாதகமாக கருத்து கூறியுள்ளன.

காஸ்பரோவிச்சின் புகைப்படத்தையும், பந்து அவரது கையுறையில் படும்போது துடுப்பை விட்டு விலகி இருக்கும் புகைபடத்தையும் "சிட்னி மோர்னிங் ஹெரால்டு" பத்திரிகை வெளியிட்டு உள்ளது. கிரிக்கெட் விதிமுறைகளின்படி, துடுப்பைப் பிடித்திருக்கும்போது மட்டுமே, கையுறையில் பந்து பட்டு பிடித்தாலும் அவுட் தரலாம். துடுப்பைப் பிடித்திருக்காத நிலையில், ஒரு கையின் உறையில் பந்து பட்டு பிடித்தால் அது அவுட் ஆகாது.

**எஸ். கணேஷ்**

"காஸ்பரோவிச் அவுட் என நடுவர் அறிவித்திருந்தால், அவுஸ்திரேலியாவுக்கு மிகச் சிறப்பான வெற்றி கிடைத்திருக்குமோ நமக்கு இனி ஒருபோதும் தெரியப் போவதில்லை" என்றது அப்பத்திரிகை. இந்த ஆட்டமிழப்பு குறித்த சிந்தனையாகவே தாம் இருப்பதாகவும், அனேகமாக வாழ்நாள் முழுவதும் இந்த அவுட் குறித்து மறக்க முடியாது எனவும் காஸ்பரோவிச் கூறினார். வெற்றிக்கு மிக அருகில் வந்து, தோல்வி அடைந்தது கொடுமையானது, ஏமாற்றமளிக்கிறது என்றார் காஸ்பரோவிச்.

## பத்தாயிரம் ஓட்டங்களை கடந்தார்கள் கங்குலி / ஜெயசூரியா

ஒருதின துடுப்பாட்ட போட்டியில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்தார் இந்தியாவின் சௌரவ் கங்குலி. இலங்கைக்கு எதிராக தம்புலவில் புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 51 ஓட்டங்களைச் சேர்த்து கங்குலி ஆட்டமிழந்தார். அவர் 33-வது ஓட்டத்தை எட்டியதும் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த உலகின் மூன்றாவது வீரரானார். இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் (13,640 ஓட்டங்கள், 348 ஆட்டங்கள்), பாகிஸ்தானின் இன்சமாம் உல் ஹக் (10,933 ஓட்டங்கள், 344 ஆட்டங்கள்) ஆகியோர் முன்னதாக அப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். இதுவரை 272 போட்டிகளில் விளையாடியுள்ள கங்குலி, 22 சதங்களையும், 60 அரை சதங்களையும் அடித்துள்ளார். இந்தியா, சிறிலங்கா இறுதியாட்டத்தில் 67 ஓட்டங்களை பெற்று ஜெயசூரியாவும் இப்பட்டியலில் (10,066 ஓட்டங்கள்) சேர்ந்துள்ளார். ஆசிய லெவன் அணிக்கு சௌரவ் கங்குலி தேர்வு செய்யப்படாதது தேர்வுக் குழுவினரின் ஒருமனதான முடிவே என தேர்வுக் குழு உறுப்பினர்களின் ஒருவரான மஜித் கான் தெரிவித்துள்ளார். ஆசிய லெவன் - தென்ஆபிரிக்கா லெவன் அணிகளுக்கு இடையிலான மூன்று ஒருநாள் துடுப்பாட்ட போட்டிகள் வரும் 17 முதல் 21 ஆம் திகதி வரை தென்ஆபிரிக்காவில் நடைபெறவுள்ளன. ஆசிய லெவன் அணியில் திராவிட், சேவாக், பதான், கும்ப்ளே ஆகிய நான்கு இந்திய வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இலங்கையின் குமார் சங்கக்கரா, சனத் ஜயசூர்யா, முத்தையா முரளிதரன், பாகிஸ்தானின் ஷேயாப் அக்தர் ஆகியோரும் அணியில் உள்ளனர். அணிக்கு பாகிஸ்தானின் இன்சமாம் உல் ஹக் அணித்தலைவராக தேர்வு பெற்றுள்ளார். நல நிதிக்காக நடைபெறும் இப்போட்டிக்கான ஆசிய லெவன் அணியில் கங்குலி இடம்பெறவில்லை. இது குறித்து கங்குலி அதிருப்தி தெரிவித்தார். பல்வேறு விமர்சனங்களும் எழுந்தன.

இந்நிலையில் அணியின் தேர்வுக்குழு உறுப்பினர்களில் ஒருவரும், பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவருமான மஜித் கான் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளது: சமீபத்திய ஆட்டங்களில் கங்குலி வெளிப்படுத்திய பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு தேர்வுக்குழுவினர் ஒருமனதாக அவரைத் தேர்வு செய்யவில்லை. இந்த ஆண்டில் அவர் விளையாடிய நான்கு ஆட்டங்களில் 18 ஓட்டங்களை மட்டுமே சேர்த்துள்ளார். அதே சமயம் கடந்த ஆண்டு 31 ஆட்டங்களில் விளையாடி 947 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார் கங்குலி. சராசரி 32.

அதே சமயம் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளராக அக்தர் உள்ளதாலும், தென் ஆபிரிக்காவில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்றவராகவும் அவரைக் கருதி தேர்வு செய்துள்ளனர். உடற்தகுதி மட்டுமே அவருக்கு எதிராக நிகழ்ந்த விவாதம்.

சமீபத்திய கவுன்டி போட்டிகளில் விளையாடிவருவதால் ஆசிய அணிக்கு அக்தர் தேர்வு செய்யப்பட்டார் என்றார் மஜித்கான். இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான துடுப்பாட்ட தொடரில் பாதியில் திரும்பினார் அக்தர். அதன்பிறகு போட்டிகளில் அவர் பங்கேற்கவில்லை. தற்போது வொர்ஷெஸ்டர்ஷர் அணிக்காக கவுன்டி போட்டிகளில் விளையாடி வருகிறார். ஓர் ஆட்டத்தில் 47 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

## 600 விக்கெட்டுகளை எட்டிப் பிடித்தார் வார்னே!

அவுஸ்திலியாவுக்கு எதிரான மூன்றாவது ஆஷஸ் ரெஸ்ற் போட்டி மான்செஸ்டரில் வியாழக்கிழமை தொடங்கியது. அவுஸ்திரேலிய அணியில் இடம்பெறுவார்களா என்ற சந்தேகத்தில் இருந்த பிரெட் லீ, கிளென் மெக்ராத் ஆகியோர் உடல்தகுதி பெற்று, களத்தில் குதித்தனர். இரண்டாவது ரெஸ்ற் போட்டியில் விளையாடிய இங்கிலாந்து அணியில் மாற்றம் ஏதும் இல்லை. டிரஸ்கோதிக்கும், ஸ்டிராஸீம் ஆட்டத்தைத் தொடங்கினர். ஆனால் ஸ்டிராஸ் ஆறு ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தார். அதன்பிறகு டிரஸ்கோதிக்குடன் அணித்தலைவர் வாகன் இணைந்தார். இருவரும் நிதானமாக ஆடி அணியின் எண்ணிக்கையை உயர்த்தினர். அவர்களை பிரிக்க அவுஸ்திரேலிய வீரர்கள் மேற்கொண்ட முயற்சி வெகுநேரம் பலிக்கவில்லை.

அணியின் எண்ணிக்கை 163 ஆக இருந்த போது, வார்னே வீசிய பந்தில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து டிரஸ்கோதிக் ஆட்டமிழந்தார். அவரது இழப்பு, வார்னேவுக்கு புதிய மைல்கல்லாக அமைந்தது. ரெஸ்ற் கிரிக்கெட்டில் 600 விக்கெட்டுகளை வீழ்த்திய உலகின் முதல் வீரர் என்ற வரலாறு படைத்தார் அவர். 1992 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக சிட்னியில் துடுப்பாட்ட வாழ்க்கையைத் தொடங்கினார் வார்னே. அப்போட்டியில் ரவி சாஸ்திரியை 206 ஓட்டங்களில் ஆட்டமிழக்கச் செய்து முதல் விக்கெட்டைப் பதிவு செய்தார். வார்னேக்கு அடுத்தபடியாக இலங்கையின் முரளிதரன் 549 விக்கெட்டுகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார்.




WEB CREATION

**அதிக செலவில்லாமல் சிறப்பான இணைய தளத்தை உங்கள் வியாபாரத்துக்கு என அமைக்க வேண்டுமா? இலவச ஆலோசனை பெற இன்றே, இப்போதே அழையுங்கள்** M. Karthik

தொலைபேசி எண் - 647 519 0623




அனுபவமும், திறமையும், பொறுமையும் இணைகிற போது உயர்ந்த இலக்குகள் இலகுவாக சாத்தியமாகும்




HomeLife GTA Realty Inc. Broker
1711 McCowan Raod, Suite 206
Toronto, Ontario M1S 3Y3
T. 416.321.6969 F. 416.321.6963

**Nel Ketha** B.Sc. (Ag)
Sales Representative

**416.677.4707**
knellinathan@trebnet.com



RAFFLE CLASS AND HIGHLY PROFESSIONAL



# வீடு வாங்குபவர்களுக்குரிய சலுகைகள்

## Home Buyers Plan (HBP)

The home buyers plan இன்படி முதல்தடவையாக ஒருவர் வீடு வாங்கும்போது Registered Retirement Savings Plan (RRSP) இலிருந்து $20,000 வரை பெற்றுக் கொள்ளலாம். இந்தப்பணம் வீடு வாங்குவதற்கு, அல்லது புதிய வீடு நிர்மாணிப்பதற்கு பாவிக்கமுடியும். இவ்வாறு பெறப்படும் பணம், அந்தக் குறிப்பிட்ட ஆண்டிற்குரிய வருமானத்துடன் சேர்த்து கொள்ளவேண்டிய தேவையில்லை.

## தொடர் - 212

இது வீடு வாங்குவதற்கு / நிர்மாணிப்பதனை ஊக்குவிப்பதற்காக கொண்டுவரப்பட்ட திட்டமாகும். இவ்வாறு $20,000 வரை, RRSP இலிருந்து பெறும்போது பணத்தை பலரிற்கு கொடுக்கும் நிதி நிறுவனம் எந்தத் தொகையையும் வரி செலுத்துவதற்காக பிடித்து வைத்திருக்ககூடாது என்பதனையும் அறிந் திருக்கவும் இன்னொருவருடன் அல்லது கணவன், மனைவியுடன் சேர்ந்து வீடு வாங்க / நிர்மாணிக்கும்போது $40,000 வரை RRSP இலிருந்து பெறலாம்.

### முக்கிய குறிப்புகள்

1. பொதுவாக இந்த திட்டத்திலிருந்து பணம் பெறுபவர் முதல் தடவையாக வீடு வாங்குபவராக இருந்தல் வேண்டும்.

2. கணவன் அல்லது மனைவியுடன் சேர்ந்து வீடு வாங்குவதற்கு, அல்லது நிர்மாணிப்பதற்காக RRSP இலிருந்து பணம் பெறுபவர், மற்றவர், மனைவி அல்லது கணவன் 30 நாட்களிற்கு மேலாக வீடு வைத்திருந்திருக்க கூடாது.

• மேலும் கடந்த 5 வருடங்களாக கணவன், அல்லது மனைவி வீடு வைத்திருக்காமல் இருந்தாலும் முதல் தடவை வீடு வாங்குபராக கணக்கிடப்படும் 5 வருடங்கள் எனக் கணக்கிடும் போது பணம் பெறும் ஆண்டும் அதற்கு முந்திய நான்கு (4) வருடங்களும் கணக்கிடப்படும்.



• இந்த திட்டத்தால் பெறப்படும் பணத்திற்கு வருமானவரி (Income Tax) செலுத்த தேவையில்லை.

• பெறப்படும் பணம் 15 வருடங்களில் திருப்பி செலுத்த வேண்டும்.
பணம் பெறும் ஆண்டிலிருந்து இரண்டாவது வருடத்திலிருந்து திருப்பி செலுத்துதல் வேண்டும். குறைந்தது 15 இல் ஒரு பங்கு குறிப்பிட்ட ஆண்டில் திருப்பி செலுத்த வேண்டும். உதாரணமாக 15,000 RRSP இலிருந்து HBP திட்டம் மூலம் பெற்றிருந்தால் ஒவ்வொரு வருடமும் குறைந்தது $1,000 ஆவது திருப்பி செலுத்த வேண்டும். 2005 ஆம் ஆண்டு ஒருவர் $ 15,000 பெற்றிருந்தால் 2007 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது $1,000 ஆவது ஒவ்வொரு வருடமும் RRSP இற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிட்டால், அந்த வருடத்திற்குரிய வருமானமாக அந்தத்தொகை கணக்கிடப்படும். அதாவது உங்களது வருட வருமானத்துடன் கூட்டப்படும். பின்பு அதற்கு வருமான வரி செலுத்தவேண்டும்.

## GST New Housing Rebate

பொதுவாக புதிதாக வீடு, கொண்டோ வாங்கும் போது GST திருப்பி பெறக்கூடியதாக இருக்கும். GST Rebate வீட்டின் விலைக்கு ஏற்ப மாறுபடும்.

குறிப்பு - திருப்பி விற்கப்படும் (Resale) வீடு, கொண்டோக்களிற்கு GST கிடையாது என்பது அறிந்திருக்கவும்.

• ஆதனத்தின் விலை $350,000 வரை 2.52% Rebate கிடைக்கும்.
• விலை $350,000 இற்கும் $450,000 வரை GST Rebate குறைந்து கொண்டுவரும்.
• $450,000 இற்கும் மேலதிகமான விலை உள்ள ஆதனத்திற்கு GST Rebate கிடையாது.

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

முக்கியகுறிப்பு - ரொறொன்ரோ பெரும்பாகத்தில் GTA இல் (Greater Toronto Area இல்), அனேகமான ஆதனம் நிர்மாணம் செய்யும் நிறுவனங்கள் GST ஐ வீட்டின் விலையுடன் சேர்த்தே விற்பதுடன் அரசாங்கத்திடமிருந்து மீளக் கிடைக்கும் GST தொகையை தாங்களே பெற்றுக் கொள்ளக்கூடியதான பத்திரத்தில் ஒப்பமிட்டு பெற்றுக்கொள்வார்கள்.





**$284,900**
MCCOWAN & ELLESMERE
Semi detached 4 level back split. Sep. entrance, 2 kitchen,

**$249,000**
MORNINGSIDE&SHEPPARD
Detached 2 storey
3 + 1 bedrooms, sep. entrance possible. 3 washrooms

**$179,900**
MORNINGSIDE&SHEPPARD
Townhouse, low maintenance fee. 3 + 1 bedrooms

**Warden/Lawrence**



Free standing Industrial Building, central location, Truck Level, Drive thru

**$1,200,000**

**$329,000**
WESTNEY & KINGSTON (AJAX)
Detached 2 storey 3 bedrooms, 2 kitchen, walk-out, hardwood floor, great location

**$289,900**
MCCOWAN& LAWRENCE
Detached Bungalow
3 + 2 bedrooms walkout, sep. entrance, 2 kitchen, mostly upgraded windows.

**$489,900**
JANE/MAJOR MCKENZE (Maple)
Brand new detached 2 storey
9' Ceiling, Uptgrades. 2600 SFT, Hardwood floor
4 bedrooms, 4 washrooms
doubble garage.

**$359,900**
MARKHAM & STEELES
Detached 2 storey
4 bedrooms, 3 washrooms, 5 month new. 2,050 sq.ft.

**$239,900**
NEILSON & SHEPPARD
Semi detached 2 storey
3 + 1 bedrooms, 2 kitchen, sep. entrance.

**HOUSE FOR LEASE**
MCCOWAN& LAWRENCE
3 bedrooms, Close to Scarborough General hospital, Avail. anytime

**$134,900**
KENNEDY & EGLINTON
2 bedroom condo. coner unit, parquet floor.

HOMELIFE HIGHER STANDARDS

**Raja Mahendran,** P.Eng.
Broker/Owner
**Cell: 416.315.9397**
**Off : 416.321.6969**



**HOMELIFE/GTA Realty Inc. 1711McCowan Rd. Suite 206. Toronto, ON M1S-3Y3**

# நாடகத்தின் தனித்துவம்

*கடந்த இதழ் தொடர்ச்சி*

தத்துவ ஞானி அரிஸ்ரோட்டிலுக்கும் படத்தை அசையவைக்கும் கனவு இருந்துதானிருக்கிறது. அது கி.மு. 300 ஆண்டின் கனவு. பின்வந்த ஒவ்வொரு கால கட்டத்திலும் பலரும் இதை நோக்கிய முயற்சியை மேற்கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். ஆனாலும் கி.பி. 1895 இல் தான் இது நனவாகக் கனிந்தது எனலாம்.


1890களில் அமெரிக்க தொமஸ் அல்வா எடிசன் சலனப்படத்துக்கான கருவியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். அயராது பற்பல பரிசோதனைகளைச் செய்து பார்த்தார். அவரது உதவியாளர் லோறி டிக்சனுடன் சேர்ந்து சலனப் படமெடுக்குங் கருவீயைக் கண்டுபிடித்து "கினெற்றோகிராப்" என அதற்குப் பேரிட்டார். இதுதான் தற்போதய திரைப்படக் கமராவின் முன்னோடி.

**கவிஞர் வி. கந்தவனம்**

பின்னர் இவ்விருவரும் எடுத்த சலனப் படத்தைப் பார்க்கக்கூடிய கருவியொன்றைக் கண்டுபிடித்து அதற்கு "கினெற்றோஸ்கோப்" எனப் பேரிட்டனர் இது படங் காட்டும் கருவியாக இல்லாது படம் பார்க்கும் கருவியாக மட்டுமே இருந்தது. அதாவது அந்தக் கருவியிலுள்ள சிறு துவாரத்தில் கண்ணை வைத்து ஒவ்வொருவராகவே படம் பார்க்க முடிந்தது.

எடிசன் கொம்பனியின் இக்கருவிகளை கண்காட்சியில் பார்த்த பலரும் இதுபோன்ற முயற்சியில் இறங்கினார்கள். இதே கால கட்டத்தில்தான் ஹென்றி றெயின்பேக்கின் கண்டுபிடிப்பான செலுலோயிட் படச் சுருள்களை ஜோஜ் ஈஸ்றமனின் ஈஸ்றமன் நிறுவனம் தயாரித்து வந்தது. இப்படச் சுருள்களையே பலரும் சலனப் படச் சுருள்களாகப் பாவிக்கத் தொடங்கினர்.

1895- ஏப்ரலில் வூட்வில் லத்தம் என்பவரால் "இடோளோஸ்கோப்" எனப்பெயரிடப்பட்ட இன்னொருவகை படங்காட்டும் கருவி நியுயோக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. அதில் படச் சுருளை இலாவகமாக சுழல வைக்கக்கூடியதான சுழல் சில்லு இணைக்கப்பட்டிருந்தது.



அதன் சிறப்பம்சம் - இப்பொறிமுறையே இன்றளவும் பாவிக்கப்படுகின்றது.

எடிசனின் திரைப்படக் கருவிகளில் ஆர்வமுற்றவரும் பிரான்சில் புகைப்பட சாதனங்களை உற்பத்தி செய்து வந்தவருமான லுமீரியர் தனது புதல்வர்களான லூயிஸ், ஒகஸ்ரி இருவரிடமும் இதுபோன்ற சலனப் படங்காட்டும் சாதனத்தை வடிவமைக்கும் பொறுப்பை ஒப்படைத்ததில் அவர்கள் முறையே படம் பிடித்தல், படச்சுருள் கழுவுதல், படங்காட்டுதல் எல்லாவற்றையும் ஒருங்கே செய்யக்கூடிய ஓர் இயந்திரத்தை வடிவமைத்தனர். அதற்கு "சினி-மாற்றோகிராபி" எனப் பெயருமிட்டனர்.

இந்த சினிமாற்றோகிராபி உருவத்தில் சிறிதாயும் காவித் திரியத்தக்க கனத்துடனும் படத் தயாரிப்பின் மூன்று வேறான பிரதான வேலைகளையும் செய்ததால் ஒரே நாளில் படத்தை எடுத்து, கழுவிக் காட்டவும் முடிந்தது. இது இதன் சிறப்பம்சமாக இருந்தும் இதனிலும் அதிசிறப்பாக இது பலநூறு பேர்கள் ஒரே நேரத்தில் பார்க்கக்கூடியதான படங்காட்டும் உபகரணமாகவும் இருந்ததால் இதுவே இலகுவில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது. ஒப்பீட்டளவில் குறைவான விலையிலும் இது கிடைத்தது.

1895 டிசம்பர் 28 இல் நாலு அல்லது ஐந்து நிமிட சிறு துண்டுப் படங்களான புகையிரத நிலையத்துக்கு புகைவண்டி வருவது, வேலையாட்கள் தொழிற்சாலையிலிருந்து வெளியேறுதல், குழந்தைக்குப் பாலூட்டல், தோட்டக்காரன் பூந்தோட்டத்துக்கு நீர்வார்த்தல் போன்ற சாதாரண வாழ்க்கை காட்சியை 20 நிமிட நிகழ்ச்சியாகக் காட்சியாக்கியிருந்தனர். ஒரே நாளில் 20 படக்காட்சிகளைக் காண்பித்தனர். அன்றைய நாளே சலனப்படம் பிறந்த நாளாக சரித்திரத்தில் இடம்பிடித்தது. சினிமாற்றோகிராபி என்பதிலிருந்தே பின்னர் சினி-மா என்ற வார்த்தையும் பிறந்தது. சினிமாவின் தந்தையராக ஒகஸ்ரி, லூயிஸ் லுமீரியர் சகோதர்கள் இன்றளவுங் கொண்டாடப்படுகின்றனர்.

எடிசன் எவ்வளவு எத்தனிப்புகள் செய்தும் சரியான தருணத்தில் சரியான இயந்திரத்தை கொடுக்கத் தாமதித்ததால் அவருக்குக் கிட்டாத புகழ், அவரது படைப்புகளின் தூண்டுதலால் உந்தப்பட்டு அவரது சுவடுகளைப் பின்பற்றி சினிமாற்றோகிராபியை தயாரித்த லுமீரியர் சகோதரர்களுக்கே வாய்த்தது.




## தமிழர் நிர்வாகத்தில் ஒரு

# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

**ஆனால்**



- *வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)*
- *இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)*
- *இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)*

416-332-8451

Finch / Middlefield

5200 Finch Ave., Scarborough

சமோசாவிற்கு அழையுங்கள்

416-332-0944



# Neelam silk

**சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்**

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE



பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

**"நீலம் சில்க்"**

T.P: 416-778-7455 Fax: 416-778-8484

1453 GERRARD STREET, EAST (INDIAN BAZZAR)

T.P: 416-759-2002

2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)



# DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca

# விகாரங்களுக்குப் போர்த்தப்படும் புனித ஆடைகள்

மனித மனத்துக்கு விகாரங்கள் உண்டு தான். அது விகாரங்கள் என அறியப்படவேண்டும். விகாரங்கள் காணப்படுவதோ அதைக் களையும் முயற்சிகளோ ஏதும் புதிதல்ல. ஆனால் அதை மூடி மறைத்து அதற்கு புனித ஆடைகள் போர்த்தி நியாயப்படுத்துவது பற்றி என்ன சொல்வது.?

ஆனால் இந்த விகாரங்கள் ஒரு சமூகத்தினதாக இருந்து, பின் அது மரபு, சரித்திரம், மதம், என்றெல்லாம் காரணம் காட்டி, பாதுகாக்கப் படுமானால், அதற்கு அந்த சமூகத்தின் அதிகாரங்கள் துணை நின்று, நியாயப்படுத்து மானால், அதற்கு அரசும் வாய்மூடி ஆதரவு தருமானால், என்ன சொல்வது,? இந்த நடைமுறையைப்பற்றி இப்படியே சொல்லிக் கொண்டுபோனால், விடயத்திலிருந்து தப்புவதாகத் தான் முடியும். எந்த ஒரு விடயத்தின் நியாய அநியாயங்களைப்பற்றியும் எதுவும் சொல்லத் தயங்குகிறவர்களுக்கு இப்படியான பொதுப்படையான உபதேசங்கள் மிகவும் உதவிகரமாக இருக்கும், தப்புவதற்கும், எல்லோரிடமும் நல்ல பெயர் பெறுவதற்கும்.

சொல்லுவதென்றால் பெரிய மேடையின் மீது அமர்ந்து இப்படிச் சொல்லலாம். இந்திய பிரிவினையின் போது, காங்கிரஸ் அதை எதிர்த்த காரணம் நாடு மத ரீதியாக பிரிவுபடக்கூடாது என்றது. பெரும்பான்மையாக முஸ்லீம்கள் வாழும் இடங்கள் பாகிஸ்தானாகப் பிரிவு பட்டாலும், மிகுந்துள்ள இந்திய பகுதியில் உள்ள முஸ்லீம்களின் சனத்தொகை பிரிந்து செல்லும் பாகிஸ்தான் முஸ்லீம்களின் எண்ணிக்கையை விட அதிகம். மேலும் பாகிஸ்தானிலிருந்து இந்துக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக விரட்டப்பட்டு வந்து சேர்ந்தது அந்த சரித்திரத்தின் ஒரு பெரும் சோகக் கதை. ஆனால் மதத்தின் அடிப்படையில் இந்தியா தன்னை உருவாக்கிக் கொள்ளாததாலும், இந்தியாவின் சரித்திரமும் கலாசாரமும், எல்லா மதத்தினரையும் தன்னுட்கொண்ட ஒருமைப்பட்ட ஒன்றாக இருந்த காரணத்தினாலும் இந்தியா தன்னை மதச் சார்பற்ற நாடாக கோசம் இட்டுக் கொண்டது.

எல்லா மதத்தினருக்கும் சம உரிமை உண்டென்ற போதிலும், நடைமுறையில் அது சிறுபான்மையினர் விசயத்தில் சற்று அதிக சார்புடையதாகவே இருந்தது. மதச் சார்பு இல்லையெனில், அதன் வெளிப்பாடாக, எல்லோருக்கும் பொதுவான சிவில் சட்டம் ஒன்று இருப்பது தான் நியாயமும் வேண்டப்படுவதும் என்றபோதிலும், முஸ்லீம் சமுதாயமே அதை வேண்டும் வரை, அதைத் தள்ளிப் போடுவது என்று 1950 களில் அரசியல் நிர்ணய சட்டம் உருவாகும் சமயத்தில் தீர்மானிக்கப் பட்டது.

ஆனால் இன்றுவரை முஸ்லீம் மக்களின் அரசியல், மதத் தலைமைகள், அத்தகைய ஒரு பொது சிவில் சட்டத்தைப் பற்றி நினைப்பதையே இஸ்லாத்திற்கும், குரானுக்கும், ஷரியத்துக்கும் எதிரான ஒரு செயலாகவே பிரகடனப் படுத்தி வருகின்றனர். இது பொதுவான நிலை. படித்தவர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள், பாமர மக்கள், அறிவாளிகள் என்றெல்லாம் வேற்றுமை ஏதுமின்றி, யாருமே பொது சிவில் சட்டம் ஒன்றைப்பற்றி நினைப்பே இல்லாதவர்கள் தான். முற்போக்கான சிந்தனையாளர்கள் சிலர், ஷரியத் மாற்றி அமைக்கப்படவேண்டும், 1000-1400 வருடங்கள் முந்திய, இனக்குழு மரபு சார்ந்த (tribal) சமுதாயத்தில் உருவான விதி முறைகளைச் சார்ந்தே நடப்பது என்பது சரியல்ல என்று நினைப்போடு, அது மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று தான் சொல்வதோடு நின்று விடுகிறார்கள். அதற்கு மேற்சென்று தம் சமுதாய அதிகார மையங்களுக்கு அவர்கள் எடுத்துச் செல்வதில்லை. மிகவும் இறுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த ஒன்றாக அச்சமுதாயம் இருந்து வருகிறது. அத்தகைய இறுகிய கட்டமைப்பில் தான் தம் தலைமை பாதுகாக்கப்படும் என்று அரசியல், மதத்தலைமைகள் கருதுகின்றனர்.

சமீபத்தில் நடந்த ஒரு சோக நிகழ்வை முன் வைத்தால், அதன் கொடூர பரிமாணங்கள் தெளிவாகும். உத்தர பிரதேசத்தில் முஸஃபர் நகரில், இம்ரானா என்னும் பெண்ணை அவளது மாமனார் அலி முகம்மது பாலியல் பலாத்காரம் செய்து விட்ட வழக்கு, ஊர் பஞ்சாயத்தாலும், தியோபந்த் தாரும் உலூம் என்னும் முஸ்லீம் மத குருமார்கள் சபையாலும், விசாரிக்கப்பட்டு, அவர்கள் வழங்கிய தீர்ப்பு: 'இம்ரானாவை அவளது மாமனர், அலி முகம்மதுவுடன் பாலியல் பலாத்காரத்தால் கூடியதால் இனி அவளுடைய கணவன் நூர் முகம்மதுவுக்கு தாயாகிவிட்டாள். எனவே அவள் கணவனுடன் வாழ இயலாது. நூர் முகம்மதுவுடனான அவர் திருமணமும் இத்துடன் ரத்தாகிறது. அவர்கள் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு இனி கணவன் நூர்முகம்மதுவைச் சாரும்."

தீர்ப்பின் இவ்வாசகங்களைக் கேட்ட அந்தக் கணத்திலேயே எந்த மனித இருதயத்திற்கும், நியாய உணர்வுள்ள மனத்திற்கும், இத்தீர்ப்பு வெகு கொடூரமானதும், நாறி அழுகியதுமான ஒரு மனத்தின் கோரப்பற்களையே காட்டும். இதற்கு ஒரு சாதாரண மனித இருதயம் போதும். நிறைந்த பாண்டித்யம் வேண்டாம். மத சாஸ்திர ஞானம் வேண்டாம். குருமார்களின் திருச்சபையும் வேண்டாம். இத்தகைய கோர, அழுகிய மனத்தின் வெளிப்பாட்டை எந்த மதமும், புனித நூலும் ஏற்கும், உபதேசிக்கும் என்று எண்ணக்கூட முடியாது. அப்படி ஏதும் வாசகங்கள் இருப்பதாகச் சொல்லப்பட்டால், அது ஒரு அழுகிய மனம் விகாரப்படுத்தி அர்த்தப் படுத்துகிறது என்று தான் சொல்லவேண்டும்.

## வெங்கட் சாமிநாதன்

இதற்கு அவர்கள் மேற்கோள் காட்டும் புனித வாசகங்கள்: 'உன் தந்தையுடன் உறவு கொண்ட பெண்ணை நீ மணக்கக் கூடாது'. சரி. இதற்கும் முன்னிருக்கும் வழக்கின் சம்பவங்களுக்கும் என்ன சம்பந்தம்? வழக்கு ஒருவன் மனைவியை தகாது பலாத்காரத்தில் உறவு கொண்ட மாமனாரைப் பற்றியதாக இருக்க, தாருல் உலுமில் இருக்கும் மதத் தலைவர்களுக்கு அது தந்தையுடன் உறவு கொண்ட பெண்ணை மணக்கும் விடயமாக மாற்றிப் படிக்கப்பட்டு தண்டனை வழங்கப் படுகிறது. இது கொடுமையா, காமெடியா?

இஸ்லாமிய பேராசிரியரும், National Commission for Religious and Linguistic Minorities-ப் உறுப்பினருமான பேராசியர் தாஹுர் முகம்மது சொல்கிறார் "கணவனின் உறவினர் ஒருவரின் இம்மாதிரியான தகாத நடத்தை "ஹராம்", இது கணவனுக்கும் மனைவிக்கு மிடையேயான உறவின் நீதிக்கு பங்கம் விளைவிப்பது, 1000 வருடத்திற்கு முந்திய அந்நீதிமான்கள் கூறியது அக்காலத்திற்கே பொருந்தும். ஏனெனில், மணம் முறிப்பதும், வேறு மணம் செய்து கொள்வதும் மிக சாதாரண ஒரு நடப்பாக இருந்த காலத்தில் உருவான நீதி இது. ஆண்களின் அநீதிக்கு இரையாகும் பெண்களுக்கு அளிக்கப்பட்ட சுதந்திரம் இது. ஆகவே இன்று இது கட்டாய விதி முறையாகாது" என்கிறார். அவர் இவ்வளவு தூரமே செல்ல முடியும்.

All India Muslim Personal Law Board சொல்வதோ வேறு: ஷரியத்தின் ஆதாரத்தில் அமைந்த முஸ்லீம் personal law, குரானும் ஹிதீஸம் விதித்துள்ள அடிப்படை விதிகளாகும். அது 1400 வருடங்கள் பழமையானது எனவே, அதை மாற்றுவது என்ற பேச்சுக்கே இடம்



இல்லை' என்று தாருல் உலூம் தீர்ப்புக்கு ஆதரவாக பேசியது, அந்த board-ஐச் சேர்ந்த முஃப்டிகள், ஹபீப்-உர்-ரஹ்மானும், எஜாஸ் அர்த் கமியும்.

இவர்கள் மாத்திரம் இல்லை. உத்தர பிரதேசத்தின் முக்கிய மந்திரியான முலாயம் ஸிங் யாதவ், உத்தர பிரதேசத்தில் மிகக் கணிசமான தொகையில் இருக்கும் முஸ்லீம்களையும், தன் ஜாதியினரான யாதவ்களையும் ஒன்று சேர்த்துவிட்டால், தான் ஒரு பெரும் சக்தியாக முடியும் என்று கண்டு அதன் பலத்தில் தன் கட்சியை வளர்த்து முக்கிய மந்திரியாகவும் ஆகிக்காட்டியவர். அவர் சொல்கிறார்: "தாருல் உலூமில் நிறையப் படித்த அறிவாளிகள் இருக்கிறார்கள். அவர்கள் மதவிடயங்களில் நிறைந்த ஞானம் உள்ளவர்கள். எல்லோரும் பொறுப்பானவர்கள். ஆகவே, அவர்கள் வெகு ஆழமாக சிந்தித்துத் தான் இந்த முடிவுக்கு வந்திருக்கவேண்டும்." என்று அவர்களுக்கு நன்னடத்தைத் தகுதிப் பத்திரமும் வழங்கிவிட்டார். முஸ்லீம்கள் என்ன செய்தாலும் அவர்களைப் பகைத்துக் கொண்டு அவர்கள் வாக்குகளை இழக்க அவருக்கு விருப்பமில்லை. இன்னோரு அறிவாளி, மிக கௌரவமான ஜாகிர் ஹுஸேன் குடும்பத்தில் வந்தவர். உத்திரப் பிரதேசத்தில் ஒரு முக்கிய காங்கிரஸ் தலைவர். பல உயர்ந்த பதவிகள் வகித்தவர்: ஒரு சமயம் இந்தியாவின் வெளி விவகார அமைச்சராக இருந்தவர்: எதுவும் சட்டத்தின் படி நடக்க வேண்டும். எதிலும் சட்டத்தின் அதிகாரம் மீறப்படக்கூடாது. தாருல் உலூம், ஷரியத் படி தீர்ப்புச் சொல்லியுள்ளது. ஷரியத்தின் அதிகாரத்தையும், Muslim Personal Law வையும், இந்திய சட்டம் அனுமதித்துள்ளது. ஆகவே எல்லாம் சட்டத்தின் வரம்பிற்குட்பட்டே நடக்கிறது. எவ்வளவு சாமர்த்தியமான வக்கீல் இவர்! ஒரு பிற்போக்கும் ஆணாதிக்கமும், மதவாதமும் நிறைந்த ஒரு நடைமுறைக்கு இப்படி ஒரு சாமர்த்தியமான திருகல் வாதத்தை அவரைப்போன்ற ஒரு படிப்பாளி தான் தரமுடியும்.

இந்த Muslim Personal Law board சமீபத்தில் கூடி, ஒரு மாதிரிக்காநாமா (திருமண ஒப்பந்தம்) தயாரித்து முஸ்லீம் சமுதாயத்திற்கு 'சிபாரிசு' செய்தது. 210 உறுப்பினர்கள் கொண்ட அந்த வாரியத்தில் (board) கிட்டத்தட்ட 50-க்கு மேற்பட்ட பெண் அங்கத்தினர் உண்டு. அவர்களில் யாரும், ஒருவர் கூட, பங்கு பெற அனுமதிக்கப்படவில்லை. 'தலாக், தலாக், தலாக்' என்று மூன்று முறை ஒரு கணவன் சொன்னால், அவன் தன் மனைவியை விவாக ரத்து செய்து விட முடிகிறது. இதற்கு ஷரியத்தில், குரான் ஷரீஃபில் எங்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது என்று சொன்னவர் யாரும் இல்லை.

முஸ்லீம் நாடுகள் அனைத்திலும் இது நாட்டுக்கு நாடு மாறுபடும். கடுமையோடும் தாராளத்தோடும் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்திய அரசியல் நிர்ணய சட்டம் (Indian constitution), தன் 44-வது சரத்தில் தான் என்று நினைக்கிறேன், இதை முஸ்லீம் சமுதாயத்தின் தலைமைகள் தாமே சிந்தித்து ஒரு பொதுவான ஒப்புதலுக்கு வரும் வரை, பொது சிவில் சட்டம் அமுலாக்கப்படுவது தள்ளி வைக்கப்படலாம் என்று சொன்னதைப் பற்றி என்றுமே சிந்தித்ததில்லை முஸ்லீம் சமூகம். அது தன் 'ரியத்தை விட்டுக்கொடுப்பதாக இல்லை. 56 ஆண்டுகளுக்குப் பின் கூடிய அந்த AIMPL Board தான் தயாரித்த மாதிரிக்கா நாமாவை 'சிபாரிசு' மாத்திரமே செய்தது.

அது முழுக்க முழுக்க ஆண்களின் அதிகாரத்தையும், மத குருக்களின் அதிகாரத்தையும் தான் திரும்ப வலியுறுத்துவதாக உள்ளது. இந்த வாரியத்தில் (board) -ல் அங்கம் வகிக்கும் மிகக் குறைந்த வயதினரும் வாலிபரும் ஆன மௌலானா கால்பே ஜவ்வாத் கூட ஷரியத்தில் எந்த மாற்றத்தையும் தீவிரமாக எதிர்ப்பவர். 'பெண்களுக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று வாதிடுபவர்கள், உண்மையில் பெண்களை போகப் பொருளாகத்தான் பார்க்கிறார்கள்" என்கிறார். இந்த வாரியம் ஷரியத்தைப் பாதுகாத்து வழி நடத்தத்தான் இருக்கிறதே ஒழிய, அதை மாற்றுவதற்கு அல்ல, என்கிறார் வாரியத் தலைவர்.

இந்த வாரியங்களின், தாருல் உலூமாக்களின் கடைந்தெடுத்த பிற்போக்குத்தனங்களையும் கண்டு கொதித்தெழுந்த பெண்கள் சமூகம், (இதில் Awaaz-e-Nizwaan போன்ற முஸ்லீம் பெண்கள் நிறுவனங்களும் சேர்ந்தது), தெருவில் வந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அதில் பங்கு கொண்ட 'ப்னம் குரே' என்ற மாது, இதுகாறும் எந்த பொதுக் கூட்டங்களிலும் பங்கெடுக்காதவர், சொல்கிறார்: "இந்த மௌல்விகள் கூட்டம், மாமனாரின் பலாத்காரத்திற்கு இரையான பெண்ணை, அந்த மாமனாரோடு வாழவேண்டும்" என்று தீர்ப்பு சொன்னதை, நான் ரெலிவிசனில் கேட்டதும் என் ரத்தம் கொதித்தது. நாங்கள் என்ன செய்யவேண்டும், எப்படி வாழவேண்டும் என்று கட்டளையிட எந்த மௌல்விக்கும் அதிகாரம் கிடையாது".

ஒரு சாதாரண, மதத்தில் நம்பிக்கை கொண்ட வீட்டோடு வாழும் பெண்ணுக்குத் தெரிந்தது, முல்லாக்களுக்கும், படித்த அறிவாளிகளுக்கும் தெரிய மறுக்கிறது. இப்போராட்டத்தில் பங்கு கொண்ட மும்பை நகரப் பெண்களுக்கு இன்னொரு அவஸ்தை, அவர்களுக்கு மௌல்விகளிடமிருந்து வரும் கட்டளைகள்: திருமணங்களில் பாடுவதும், ஆடுவதும் கூடாது. புகைப்படங்கள் எடுக்கக்கூடாது என்பது போன்ற கட்டளைகள். 'திருமணம் ஒருவரது வாழ்க்கையில் ஒரு முறை நிகழும் மிக முக்கிய சந்தோசம் தரும் நிகழ்வு. அன்று நாங்களும், உறவினரும், நண்பர்களும் ஆடிப் பாடி சந்தோசப்படக்கூடாதா?" என்று அந்த பெண்கள் கேட்கிறார்கள். சில



தொடர்ச்சி 18ம் பக்கம்

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் **ரவி நடராஜா**

*தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.*

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(16 Years Insurance Claims Experience)

416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON




**The Mortgage Alliance company of Canada**



**வீடு வாங்குவது நீங்கள்**
**பணம் ஒழுங்கு செய்வது நான்**

உங்கள் இல்லத்தை 5% முற்பணத்துடன் கொள்வனவு செய்வதற்கு வங்கி வட்டி வீதத்தைவிட குறைவாக வீடு மற்றும் வியாபார 1ஆவது, 2ஆவது, 3ஆவது அடமான கடன் பெற நாடுங்கள் - காந்தன்



**Tel.: 416.291.3997**
**Cell: 416.895.4283**

குறைந்தவட்டி நிறைந்த பலன்

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND ®

## எமது புதிய அறிமுகங்கள்




Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

**NIRU(EUROPE) LTD.**
Unit 11, Mitcham Insustrial Estate,
85, Streatham Road, Mitcham
Surrey, CR4 2AP. U.K
Tel: +44 208 640 8228
Fax: +44 208 640 8312

# நல்லை கந்தன் எழில் காண எந்தன் இருவிழிகள் எந்த வகை போதும்

நீல கண்டனின் நெற்றிக் கண்ணின்றும் நிலமிசைவந்தவன் நெடுவேற் குமரன். இறைவனின் ஆறு திருமுகங்களான சத்தியோ சாதம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம், அகோரம், அதோமுகம் ஆகிய ஆறு திருமுகங்களில் இருந்தும் ஆறு தீப்பொறிகள் தோன்றின. இவை ஆறையும் வாயு தேவனும், அக்கினி தேவனும் சுமந்து கங்கை ஆற்றில் விடுத்தனர். கங்கை ஆறு அவற்றை சரவணப் பொய்கையில் சேர்த்தது. ஆறு அருட்சோதிச் சுடர்களும் செந்தாமரை மலர்கள் மீது ஒளிப் பிழம்பாக வந்து தங்கின. அனற்பிழம்பாகிய மேனியும் கருணைபொழியும் விழிகளும் திருக்கரங்களும் கொண்ட குழந்தைகளாக அவை உருப்பெற்றன. அவ்வாறு குழந்தைகளையும் அம்மை அணைத்தபோது அறுமுகப்பெருமான் உலகம் உய்ய திருவவதாரம் செய்தருளினார். ஐசுவரியம், வீரம், ஒளி, செல்வம், ஞானம், வைராக்கியம் என்ற ஆறு குணங்களும் ஆறுமுகங்களாகக் காணப்பட்டன. கந்தன் என்றால் ஒன்றிணைந்தவன், வாசனை உடைய என்று பொருள்.

முருகு என்றால் அழகு எனப்படும். எனவே முருகன், அழகன், குழகன். மேலும் அவன் தோன்றிவிதமும், இடமும் அழகுடையன. அவன் இருப்பிடமான குறிஞ்சி நிலம் அழகுடையது. அவனது தேவியரான தெய்வானையும், வள்ளியும் அழகுடையவர்கள். அவன் வாகனமான மயில் அழகுடையது. அவனது ஆயுதமான வேலாயுதம் அழகுடையது. அவனது பல்வேறு தோற்றங்கள்: குழந்தை, குமரன், கிழவன், ஆண்டி, ஞானகுரு, வள்ளி-தெய்வானை சமேதரன், சிவன்-பார்வதி முருகன் இணைந்த சோமஸ்கந்த மூர்த்தம். அவனது படை வீடுகள், அவனது அருட்செயல்கள் எல்லாம் அழகுடையன. அவனுரு அழகு கொலுவீற்றிருக்கும் அழகோவியம் எனலாம். அழகே ஒருருவானவன் அவன். அழகுக்கு ஒருவரும் ஒப்பில்லாதவன். அவனைப் பார்த்துக்கொண்டே பலநாள் இருக்கலாம். பசி ஏற்படாது. இதனால் தான் அவன் எழிலுருவை கண்டு களிக்க இரு கண்களும் போதாது என்று ஆதங்கப் படுகின்றார் அருணகிரிநாதர். நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான் முகனே என்பது நலிவுற்ற உள்ளத்தின் சோககீதம்.



தினைப்புனத்து வள்ளியம்மையும் தேவபுரத்து தெய்வானை அம்மையும் ஐயனுடன் எழுந்தருள இன்புற்றுக் களிக்கிறார் ஷண்முகப்பெருமான். போகானுபவனாகக் காட்சிதரும் கந்தப்பெருமான் அதேநேரம் ஞானாகாரனாகவும் காட்சி தருகின்றான். அவர் ஞானத்தின் இருப்பிடமாக ஞானாகாரனாகவும் ஞானமாகிய வேலைக் கரம் கொண்டு ஞானகரனாகவும் விளங்குகின்றார். குழந்தைச்சாமியாக இருப்பவன் ஞானபண்டிதனாகவும் விளங்குகின்றான்.

பிரணவ சொரூபியான முருகப் பெருமானிடத்தில் மும்மூர்த்திகளுமே அடங்குவர். காக்கும் கர்த்தாவாகிய முகுந்தன் அழிக்கும் சம்கார மூர்த்தியாகிய உருத்திரன் படைக்கும் கடவுளாகிய கம்லோற்பவன் இவற்றிலுள்ள முதலெழுத்துக்கள் ஒன்றான நாமமே முருகா என்பது.

முருகன் தகப்பன் சாமி. தந்தைக்கு உபதேசித்தவன் - சுவாமிநாதன். இது ஓர் அற்புதக்கோட்பாடு. இது தம்மில் தம்மக்கள் அறிவு மிக்குடமையை உணர்த்தி நிற்கின்றது. (The child is the father of the man) என்பதும் உய்துணரத்தக்கது. சுட்டபழம் வேண்டுமா சுடாதபழம் வேண்டுமா என்று கேட்டு ஔவையின் கொட்டமடக்கிய சுட்டிப் பையன். இருள் படைத்த உலகம் ஒளி நிறைந்து விளங்க கதிர் விரித்து ஒளி தருகின்றது ஒருதிருமுகம். சூரிய, சந்திர, அக்கினி தேவர்களுக்கு ஒளிதரும் இத்திருமுகம் நமது அஞ்ஞானத்தை போக்கும் ஞானக்கதிர்களாகவும் விளங்குகின்றது.

அன்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாக இயைந்து, பொருந்திய, இனிய தோற்றமளித்து மகிழ்ந்து அன்புடையவர்களுக்கு வரம் தந்தருளுகின்றது வேலவனின் இரண்டாவது திருமுகம். வேதமந்திர விதிக்கு இணங்கும் சம்பிரதாயத்திலிருந்து வழுவாது நடைபெறும் வேள்விகளைக் காப்பது கந்தனின் கருணை மிகும் மூன்றாவது திருமுகம். நம்மால் உணரப்படாத ஐயப்பாடுகளை உணர்த்தி அறிவுக்கு எட்டாத விடயங்களை விளக்கி அருள்புரிந்து ஞானம் பொழிவது ஞானபண்டிதனின் நான்காவது திருமுகம்.

அண்டிவரும் அடியவர்க்கும், அன்பர்க்கும் அந்தணரின் வேள்விகளைக் காப்பதற்கும் துஷ்ட சம்கார சிஷ்ட பரிபாலகராக வீரத்தை விளங்கச் செய்வது ஐயனின் ஐந்தாவது வெற்றித்திருமுகம். தெய்வானை, வள்ளியம்மை என்னும் கிரியாசக்தி, இச்சாசக்தியர்களை கொஞ்சி மகிழ சூரிய ஒளி காட்டுவது அழகுமிகும் ஆறாவது திருமுகம். நீலமயில் ஓங்காரம். ஓங்காரமே பிரம்மம். ஓம் என்ற ஒலியில் மற்ற எல்லா ஒலிகளும் அடங்குகின்றன.

முருகன் ஓங்கார ரூபன். நல்லையம்பதி ஒரு புண்ணிய பூமி. தெய்வீகம் மணக்கும் திருத்தலம். அரசாட்சியின் அணிநகராக விளங்கியது அன்று. அருளாட்சியின் எழில் நகராக விளங்குகின்றது இன்று. நல்லை மண்ணில் கால் பதித்தவுடன் ஒருவித தெய்வீக உணர்ச்சி ஏற்படுவது இயற்கை. தவ சிரேட்டர்களான செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் வாழ்ந்த தேரடி சிறப்புமிக்கது. திருஞானசம்பந்தர் ஆதீனம் நல்லையின் புகழை நானிலம் எங்கும் பரப்பி நிற்கின்றது. திருக்குமரனின் அரசாங்கம் அங்கு நடைபெறுகின்றது.

## நா. க. சிவராமலிங்கம்

அந்தணர்களின் திருவேடக்காட்சியும் நேரந்தவறாத பூசை ஒழுங்கும் தூய்மையும் பத்தர்களின் பக்திப் பரவசமும் நல்லையை உண்மையில் நல்ல இடமாக ஆக்கி விடுகின்றது. அலங்காரக் கந்தனாக அழகன் முருகன் ஆலய வீதிகளில் உலா வரும் அருங்காட்சி, அருள்காட்சி. கல்நெஞ்சையும் கனிய வைத்து ஆட்கொள்ளும். அண்டி வரும் அடியவர், தண்டை அணிந்த சண்முகனிடம் மண்டியிடுவது கண்டு இனிது உவக்கும் காட்சி. இருபத்தைந்து தினங்கள் யாழ். நகரமே விழாக் கோலம் பூண்டிருக்கும்.

பக்தர்கள் எத்திசையும் மொய்த்து வித்தகனின் விளங்கு புகழ் பாடுவர். முருகா என்று ஒருமுறை மெய்யுருகிச் சொன்னால் போதும் அவன் தண்டைச் சிலம்பணிந்த திருப்பாதங்களை நம் தலைமீது வைத்து திருவருள் புரிவான். வைதாரையும் வாழவைக்கும் வள்ளல் வடிவேலன் புகழ்பாடுவோம்.

சேந்தனை கந்தனை செங்கோட்டுவெற்பனை செஞ்சுடர் வேல்
வேந்தனை விளங்குவள்ளிக் காந்தனை
கந்தக் கடம்பனை கார்மயில் வாகனனை
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கொரு தாழ்வில்லையே.


# SRI PARADISE Catering & Take -out

416.269.4509

292 Markham Road, Scarborough, ON

| திங்கள் - செவ்வாய் | புதன் - வியாழன் | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 | Daily special | Dinner Special | சனி - ஞாயிறு Lunch Special |
| --- | --- | --- | --- | --- | --- |
| சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $2.99 | $5.99 |



| பரடைசின் Special | Dinner Special | Daily Special |
| --- | --- | --- |
| புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
| $2.99 | $1.99 | $2.99 |

**Sri Paradiase Specials**

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




### In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

## YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

**905-793-9546 / 416-616-5979**

250 Summerlea Road, Brampton, ON

# NTE AUTO

## New Trade Engineering Inc.




ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN


416.750.1573

## என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# SHAWN TRUCK & FORKLIFT DRIVING SCHOOL








**Fork Lift licence From $75.00**

**Truck licence A-Z From $599.00**

## In Classes

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- **A-Z & D-Z up grade** • **One on One Training**
- **Job Placement Right Away!**
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake**

**Excellent Quality - Low Cost Training**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

## Pl. Call: Raja / Shan

416.412.7618 / 416.913.9574

416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# MOHAN

## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# VASANTHAM Cleaners



## CARPET CLEANING

Houses

Condominium

Apartments

Office & Party Hall

Mattresses

Stair Case

Area Rugs



**Tel: 416 460 8297 / 416 332 0148**

**435 Middlefield Road, #70, Scarborough,ON (Finch / Middlefield)**




CAR VAN INTERIOR SHAMPOO WASH

MINI VAN INTERIOR SHAMPOO WASH



**PROPORTIONAL STEAM CLEANING**
**Dry Cleaning & Shampoo**

## THE HOME CLEANING SPEALIST




To remove all the winter salt in your car
To remove all the insvisible dust in your car seat and carpet
We also come to your place and clean it




DINNING CHAIRS

- After/Before Party Clean-up
- Move in / Move out Clean-up
- Regular Or One Time Cleans
- Window Cleaning
- Home Prep for Real Estate Listing



**Never Satisfied until you are........**
**it's a WIN! WIN! situvation for both of us**
*** If customer isn't satisfied, service offered is free***

## PAINTING

Full surface preparation including cleaning, scraping, spackling, sanding, plastering and priming
Use of only High quality materials

## MOVING

Big Or Small we do it all
- Home, Office & Apartment
- Local and Long Distance Moving
- Reasonable Rates



**AIRPORT SERVICE AVAILABLE (CAR & TRUCK)**

Fully Insured and Bonded - Free Estimate

Call Mathavan Call: Van

**Tel: 416 460 8297/ 416 332 0148 Tol free: 1 888 552 1116 Email: v_vasantham@hotmail.com**

**COMMERCIAL AND RESIDENTIAL SPECIALIST**

# என்னைப் பற்றிய என் எண்ணங்களைப் பரிசீலத்து மாற்ற வேண்டியவற்றை இன்று மாற்றிக்கொள்கிறேன்

கடந்த இருபது மாதங்களாக நான் எழுதிவரும் இத்தொடருக்கு வாசகர்கள் தரும் வரவேற்புத்தான் என்னை ஊக்குவித்து மேன்மேலும் எழுதத் தூண்டுகின்றது. உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

## ஆளுமை (57) வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

எனது வாழ்வின் வெற்றி தோல்வியின் மூலகாரணகர்த்தா நான்தான். நான், எனது குற்றங்குறைகளைப் பொறுப்பேற்காது, மற்றவர் கள் தான் பிரச்சினைக் காரணிகள் என்று குற்றம் சாட்டினாலும், எனது ஆழ் மனதிற்கு என் சரிபிழையெல்லாம் நன்கு தெரியும். ஒரே ஒருவரைத்தான் என்னால் மாற்றமுடியும். அந்த ஒருவர் நான்தான் எனும் உண்மை நான் மனமுதிர்ச்சியடைந்தபின் தான் எனக்கும் புரியும். மற்றவர்களை நான் மாற்றமுயலும்போது தான் உறவுப் பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றன எனும் விழிப்புணர்வு இத்தொடரினால் இப்போது வாசகர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் என நம்புகிறேன்.

காலத்தால் அழியாத சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை எனும் ஆன்மீகக் கோட பாடுகளை வலியுறுத்தும் இப்பிரார்த்தனைகளை உங்கள் வாழ்வில் இணைத்துக் கொண்டால் என்ன நடக்கும் தெரியுமா? உங்கள் ஆழ்மனச் சிந்தனைகள், உணர்வுகள் தூய்மையடையும். உங்கள் மன ஆரோக்கியம் வலுவடையும். உங்களைப் பற்றியும் வாழ்க்கை நீரோட்டத்தைப் பற்றியும் உங்களது விளக்கமும் விழிப்புணர்வும் படிப்படியாக மேம்பட்டுச் சிறப்புறும்.

இத்தொடரின் ஒவ்வொரு பகுதியையும் நீங்கள் கிரகித்தபின், உங்களை அடிமைப்படுத்தி இருக்கும் பழைய மனோபாவங்கள், பழக்க வழக்கங்கள், சிந்தனைகள், நம்பிக்கைகள், கோபதாபங்கள், ஆத்திரங்கள், தீர்மானங்கள், உடன்படிக்கைகள், செயற்பாடுகள் போன்ற வற்றைச் சீர்தூக்கிப் பார்த்து உங்களையே நீங்கள் ஒரு சுய அலசல் செய்து கொள்ளுங்கள். இதனால் ஏற்படும் புதிய விழிப்புணர்வுடன் உங்களை அடிமைப்படுத்தி இருந்த பழைய சிந்தனை பழக்கவழக்கங்களில் இலிருந்து விடுபட்டு, சீர்கேடுகளைக் குணப்படுத்திடும் புதிய வாழ்க்கை முறையை ஆரம்பித்து முன்னேறுங்கள்.

எம் சிந்தனைகள் தான் வாழ்க்கை அநுபவங்களாக உருவெடுக்கின்றன. பழைய எண்ணங்களை மாற்றியமைத்தால் நிச்சயம் புதியதோர் வாழ்வு உதயமாகும். சில சமயங்களில் எமது செய்கைகளில் மாற்றமும் அத்தியாவசியமாயிருக்கும் எமது தவறான நடவடிக்கையினால் பிரச்சினை தலை தூக்கினால்; அதை உணர்ந்து சரி செய்து கொள்வது எமது பொறுப்பு.

மாற்றத்தின் சக்தி, சக்தி மிகுந்ததோர் மாற்றத்திற்குள் என்னை வழிநடத்திச் செல்லும் என்பதை இதயந்திறந்த விழிப்புணர்வுடன் இன்று ஏற்றுக் கொள்கிறேன். உன் வாழ்வில், எந்த நேரமாயினும் சரி, என்ன நடந்து கொண்டிருந்தாலும் சரி, உன்னால் ஒன்றைத் தான் செய்ய முடியும். ஓர் அநுபவம், சம்பவம், நினைவு போன்ற ஏதாவது ஒன்றிற்குப் பதிலாக, எப்பொழுதும் நீ ஒன்றை மட்டும் தான் செய்யலாம். உன் மனதை நீ மாற்றலாம். எந்த சூழலிலும், நீ எந்த நிலையிருந்தாலும், சரி, உன்னால் உன் மனதை எப்பொழுதும் மாற்றிக் கொள்ள முடியும். நீயே உன் மனதின் எஜமானன், அடிமை அல்ல!



ஒருவருக்கு எதிராகவோ, ஓர் அநுபவத்திற்குப் பதிலாகவோ, உனது சிந்தனை, சொல், செயல் என்பன அமைதிக்குப் பதிலாக துக்கத்தை, பிரச்சினையை ஏற்படுத்தினால், உனது மனதை உடனடியாக மாற்று! துன்பம் தந்த பழைய வாழ்க்கை நினைவுகள், அல்லது நம்பிக்கை யில்லாத வருங்காலத்தைப் பற்றிய எண்ணங்கள் உன் மனதை மூழ்கடித்தால் என்ன செய்வது? உடனடியாக உனது மனதை மாற்றிக் கொள். உன் மனதை மாற்றுவது உனக்கு இலகுவான காரியம். உன்னால் அதை உடனடியாகச் செய்ய முடியும். உன் மனதை நீ மாற்றியவுடன் இதுவரை நீ நினைத்து நினைத்து துக்கப்பட்ட, அதிலிருந்து தப்பித்து ஓடப்பார்த்த விடயங்களெல்லாம் முற்றிலும் மாறுபட்டவை யாக உனக்குத் தென்படும். உண்மையான நிலைமையில் ஏதாவது மாற்றம் ஏற்படாத போதும் உன் மாறிய மனநோக்கு, சம்பவத்தை எதிர்கொள்ளும் உன் பார்வையை மாற்றி, நிலைமையை சுமுகமானதாக்கிவிடும்.

உன் மனதை மாற்றியமைக்க நீ விரும்பினால், இதோ சில அணுகுமுறைகள். நீ விரும்பியபடி மற்றவர்கள் மாறவேண்டும் என்பதை எதிர்பார்க்காதே. உன்னிடம் இல்லாதது ஒன்றை, 'நான் இப்படித்தான்' என்று சொல்லி, மற்றவர்கள் அதை நம்ப வேண்டும் என்று வற்புறுத்தாதே. உன்னால் இயலாதவற்றை உன்னால் செய்ய முடியும் என்று மார்தட்டாதே. உனக்குத் தெரியாதவற்றை தெரியும் என்று கூறாதே. நீ செய்யாதிருக்கப்போவதை செய்வேன் என்று சொல்லாதே. உன்னைப் பற்றி எல்லோரும் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறார் கள் என்று புலம்பாதே. நீ செய்வதெல்லாம் சரி என்று அடம் பிடிக்காதே. எதையாவது நீ வற்புறுத்தும்போது, அது ஓர் ஒட்டுண்ணி போன்ற ஓர் அடிமைப்பழக்கத்தை உருவாக்குகின்றது. இந்த அடிமைப் பழக்கத்தை பலாத்காரமாக உடைத்தெறிய முயலும்போது மனவிரிசல் ஏற்படுகின்றது.

எந்த நேரத்திலும் நீ உனது மனதை மாற்றிக் கொள்ளலாம் என்பதை இன்றுவரை நீ உணராது இருந்திருக்கலாம். இன்று, உனது சகல சிந்தனைகளையும் மாற்றுவது எப்படி? உனது பார்வைக் கண்ணோட்டத்தை மாற்றுவது எப்படி? உனக்கு நீ சொல்லும் செய்திகளை எப்படி மாற்றுவது என்பவற்றில் கவனம் செலுத்து. ஒருவரைப்பற்றியோ, ஒரு விடயத்தைப் பற்றியோ உன் மனதை மாற்றுவது, அவர், அவை உன் வாழ்வைப் பாதிக்கும் முறையை மாற்றுகிறது. இன்று சகல விடயங்களைப் பற்றியும் என்னைப்பற்றியும் என் மனதை மாற்றிக் கொள்வதில் ஈடுபடுகிறேன்.


*மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-624-9617*

லலிதா புரூடி







# பல்வேறு நோய்களைப் பறந்தோட வைக்கும் தண்ணீர் மருத்துவம் - சித்தர்கள் கண்ட விஞ்ஞானம்

**பல்வேறு நோய்களைப் பறந்தோட வைக்கும் தண்ணீர் மருத்துவம் (சிகிச்சை) சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் - நம்முன்னோர் நமக்களித்த அரும்பெரும் தத்துவங்கள்.**

### நோய்கள் குணமடையும் காலம்

1. மலச்சிக்கல் ஒருநாள்
2. வயிற்றில் வாயு, பித்தம்இரண்டு நாட்கள்
3. இரத்த அழுத்தம் (High Pressure) நாலு வாரம்
4. இலேசான புற்றுநோய் (Cancer) எட்டுவாரம்
5. மண்டைச் சளி, சைனஸ்மூன்று மாதங்கள்

## ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**

காலையில் எழுந்தவுடன் முதலில் ஒரு லீட்டர் அல்லது அதற்குமேல் அதாவது ஆறு அல்லது ஏழு டம்ளர் தண்ணீரை ஒரே தடவையில் குடித்துவிட வேண்டும். அது முடியாவிட்டால் சில வினாடிகள் இடைவேளையின் பின் முற்றாகக் குடிக்க வேண்டும். குடித்த பின் முகம் கழுவிக் கொள்ளலாம். தண்ணீர் குடித்த பின் ஒரு மணி நேரத்திற்குத் தேநீர் முதலிய எந்தவிதமான பானங்களையோ அல்லது உணவையோ உட்கொள்ளலாகாது. இது மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. இந்த தண்ணீர் மருத்துவத்தை கைக் கொள்பவர்கள் எந்த விதமான மதுபானத்தையும்




உபயோகிக்கக் கூடாது. ஒரே சமயத்தில் $1^1/4$ லீட்டர் தண்ணீரைக் குடிப்பது ஆரம்பத்தில் ஒரு சில நாட்கள் கஷ்டமாகிவிடும் பின் பழக்கமாகிவிடும்.

இவ்வாறு குடித்த தண்ணீர் குடல் பகுதிக்குள் சென்று பழைய இரத்தத்தைச் சுத்தம் செய்து புதிய இரத்தத்தை உற்பத்தி செய்ய உதவுகிறது. ஆரம்பத்தில் இரண்டு மூன்று நாட்கள் தண்ணீர் குடித்த ஒரு மணி நேரத்திற்குள் இரண்டு மூன்று தடவை சிறுநீர் கழிக்க வேண்டியிருக்கும். பின் வழமை நிலைக்கு வந்துவிடும். சோதனைகள் மூலமும் பரீட்சித்துப் பார்த்து அது பலமுறையிலும் மேற்குறிப்பிட்ட நோய்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் நீங்குவதை நீங்களும் இந்த முறையைப் பரீட்சித்துப் பார்த்து பலனடையலாம்.

**முக்கிய குறிப்பு** - மூட்டுவாதம், வாயுப்பிடிப்பு முதலிய நோய்களை உடையவர்கள் ஒரு வாரத்திற்கு தினமும் மூன்றுவேளை சாப்பாட்டிற்கு ஒரு மணிநேரத்திற்க்கு முன்பு இந்த தண்ணீர் சிகிச்சையைச் செய்துவர வேண்டும். ஒருவாரம் கழித்து தினமும் காலையில் மட்டும் செய்து வந்தால் போதும். படுக்கைக்குச் செல்லும் முன்பு காப்பி அல்லது தேநீர் போன்றவற்றையோ பழரசங்களையோ அருந்தக்கூடாது. காலையில் எழுந்ததும் ஆறு டம்ளர் தண்ணீர் குடிப்பதானது ஒரு சர்வரோக நிவாரணியாக விளங்குகிறது. இந்த நீர் சிகிச்சை முறையானது நம் முன்னோர்கள் கைக்கொண்டு பயன்பெற்ற முறைதான். இந்த அற்புத சிகிச்சை முறையை அனைவரும் கடைப்பிடித்து பயனடைய வேண்டுகிறேன். இந்த இயற்கையோடமைந்த, பக்கவிளைவற்ற தண்ணீர், மருத்துவம் சித்த வைத்தியத்தின் ஒரு முக்கிய அம்சம். இந்த முறையைக் கைக்கொள்வதில் ஏதேனும் பிரச்சினை அல்லது விளக்கம் தேவையானால் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.



YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733

416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் நந்தா





COLDWELL BANKER

Coldwell Banker Coburn Realty

Nantha Aiyadurai, B.Eng.

Sales Rep.

Office : 613.823.7555

Cell : 613.866.9931

Toll Free : 1 800 472.6512



Friendly & Confidential Service
Just Call Justin



Justin William

Sales Rep.

416 803 7344

www.justcalljustin.com

Bus: 416 321-6969

Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife GTA Realty Inc.,
Real Estate Broker
1711 McCowan Rd., Suite 206,
Scarborough, ON. M1S 3Y3

Scarborough $259,000



High demand Brimley /Finch Area
3 +1 Bed room Free Hold Town House with Finished Basement

Markham $369,900



4+1 Bed room House in a Demand Area Lots of Upgrades $$$$$$$$$$$ Finshed Basement with Washroom Walk to School and Ttc

Markham $79,900



Dry Clean/Laundry Well Established Dry Cleaner In A Very Demanding Markham Area Low Rent, Rent+Tmi=$1522 High Income

Markham $249,900



Lowest Price in Markham,
3 Bedrooms, 2 washrooms, Totally Renovated Don't Miss This....Walk to Steeles

Scarbogugh $329,900



Renovated 3+2 Bed Room Bungalow House
2 Kitchens, 2 washrooms, Basement Apartment

Scarborough $159,900



1+1 Bedroom Luxury Condominium
Penthouse With Fireplace *Panoramic View Of City *Updated Unit

புதுமனை புகுந்திட நம்பிக்கையான சேவை!

132


நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ஒரு காலை, ஒரு மாலை, ஓர் இரவு, ஒரு நாள் விரைவாக முடிகிறது. வெய்யிலும் ஒருமாதிரி முடியப் போகுது என்று பெருமூச்சு விட்டா ஆட்டிலறி அன்னம்மா. உலகரைக் கண்டு எத்தனை நாட்கள். மலைக்குகைக்குள் மறைந்து வாழும் பின் லாடனை விட மெலிந்து விட்டார் உலகர். கோயில் திருவிழா, தேர், தீர்த்தம், பூங்காவனம், கலை நிகழ்ச்சிகள் வர்த்தகச்சோலை, வாணிப சங்கமம், வர்த்தக வசந்தம், நட்சத்திரக் கொண்டாட்டம்..... அங்கிள் உலகர் எங்கும் சங்கமமாகி களைத்து விட்டார். அத்துடன் மணித்தியாலக் கணக்கில் கலந்து கொள்ளும் ஒன்று கூடல்கள்.





இணுவில்லை, சலூனிலை பாவம் அந்தப் பிள்ளையை ஆமிசுட்டுப் போட்டுது என்று குரல் தழுதழுக்க கூறினா செக்கண்ட் புளோர் செல்லம்மா. இனி ஆமிக்காரர் ஒருவருக்கும் சலூனில் முடிவெட்ட மாட்டினமாம். பொலிஸ் குறொப்புமில்லை, ஆமி குறொப்புமில்லை. சடை வளர்த்துக் கொண்டு திரிவாங்களுக்கும்.



கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது எப்பவோ படித்தது. தமிழ் வந்த காலத்தைவிட இன்று தமிழரும் பெருகி, ஆலயங்களும் பெருகிவிட்டன. இங்கு ஆலயங்களில் தமிழ் சிறார்கள் தேவார, திருவாசகங்கள், பக்திப்பாடல்கள், சினிமாவில் வந்த பக்திப்பாடல்கள் பாடுவது போற்றத்தக்கது. உள்ளூர் கலைஞர்கள், முக்கியமாக சிறார்களுக்கு ஆலயங்கள் ஏதோ ஒரு வகையில் கைகொடுக்கிறார்கள்.


***'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' 'கோயில் இல்லா ஊரில் .....???***



வரசித்தி விநாயகர் ஆலயம், துர்க்கேஸ்வரம் பிறம்ரன், மிஸிசாகா ஸ்ரீ துர்கேஸ்வரம் போன்றவற்றில் பாரதி ஆட்ஸ் கீபோட் வாத்திய இசையில் அம்மன் பாடல்கள், பக்தி பாடல்கள் தொடர்ந்து மூன்று நாட்கள் நிகழ்ச்சி நடத்தியதும் மக்கள் பாராட்டியதும் பெருமைப்படக்கூடியதே. இங்குள்ள இசை, நடனம், வாத்தியம் போன்றவற்றைப் பயிற்றுவிக்கும் ஆசிரிய, ஆசிரியைகளை தமிழ்ப் பெற்றோர் மறக்கமாட்டார்கள். முற்றத்து மல்லிகைகளும் மணம் வீசுகின்றன. வெளிநாட்டு கலைஞர்கள் தேவையா, இல்லையா என்பது பிரச்சினையில்லை. இன்று பல்கலைக்கழகங்களில் தமிழ்ப்பாடம் இடம்பெற இருப்பதும் ரொறொன்ரோ மட்டுமல்லாமல் தமிழர் வாழும் வாட்டலூ, ஒட்டாவா போன்ற இடங்களில் தமிழ் பாடசாலைகள் வர இருப்பதும் பெருமைதான்.

***"தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"***

ராசம்மா சமயலறையில் ஒரே பிஸி. ரூபன், ரூபியிடம் ஜேர்மனியிலிருந்த இரு தமிழ் குடும்பங்கள் வந்திருந்தனர். ஆட்டிலறி அன்னம்மவும் செக்கண்புளோர் செல்லம்மாவும் உலகர் வீட்டுப்பக்கமே வரவில்லை. அந்த குடும்பத்தில் 2 குழந்தைகள். ஜேர்மன் பாசையில் கதைப்பது புரியாமல் திணறிய அன்னம்மாவும் செல்லம்மாவும் இன்று தான் வந்திருந்தனர். ஜேர்மனியில் இருந்து வந்தவர்களுக்கு மிகவும் கவலை. இங்குள்ள பிள்ளைகள் மேடை, வானொலி, தொலைக்காட்சிகளில் தமிழை தலைகரணமாக உருட்டித் தள்ளுவதும் தங்கள் பிள்ளைகள் குட்மோர்கன், குட் ஆ(ர்)பன், விகேஸ். Fatti, Mutti என பெற்றோரை அழைப்பதும் அலெஸ்... கிளா என ஏதோ பேசுவது பெருமைமதான். ஆனால் தமிழில்லையே. தாய்ப்பால் இன்றி தகரப்பால் உணவு.



இன்று தமிழீழம் செல்லும் ஆசையில் பிள்ளைகளுக்கு பலர் தமிழ் கற்பிக்கிறார்கள். ராசம்மாவின் மனம் பழைய நினைவுகளை கொண்டு வந்தது. கனடா வருவதற்கு முன் சிங்கப்பூரில் வைத்து ஏஜென் உலகருக்கு ஏ.பீ.சீ.டி சொல்லிக் கொடுத்த கதை. அது போலத்தான் தாயகம் செல்பவர்கள் எவ்வளவு வசதியாக இருந்தாலும் கனேடியன், அமெரிக்கர்கள், ஜமேக்கன் எந்த நாடாகினும் குடியுரிமை பெற்றிருந்தாலும் பேரன், பேத்தி அயலவர்களுடன் தமிழில் பிள்ளைகள் கதைக்காவிட்டால் எப்படியிருக்கும்.

கதவு திறக்கும் சத்தம். ரூபன் ரூபியா! ஜேர்மனி நண்பர்கள் உள்ளேவர இரண்டு சிறுகுழந்தைகளும் ஓடிவந்து அன்ரி, விகேஸ் (எப்படிச் சுகம்) என்று கேட்க குட், குட் என்றா செக்கண்புளோர் செல்லம்மா. அன்னம்மாக்கா கடையிலை வாழைப்பழம் வாங்கப்போறன் எண்டு சொன்னா. ஓம் ஓம் நானும் மறந்து போனேன் என்ற படி எழுந்தா செக்கண்புளோர் செல்லம்மா. நிலமை விளங்கிய ராசம்மா தனக்குள் சிரித்துக்கொண்டா.

***"பெற்றதாயும் பிறந்தநன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததுவே"***

• • •

*கண்டியில் போய் தலை முடியை வெட்டிக்கலாமா...?*
*மொட்டை அடித்துவிட்டு ஆமியிலே சேந்துக்கலாமா...?*

யாழ்ப்பாண இராணுவமுகாமில் இராணுவச்சிப்பாய் (கொமாண்டரிடம்)

சேர்: ஒரு கிழமை லீவு வேணும். நான் கெயர் கட் (முடி வெட்டவேணும்) எடுக்க வேணும்.

கொமாண்டர்: ஏன் அதுக்கு ஒரு கிழமை.



இராணு சிப்பாய்: இணுவில்லை சூட்டு சம்பவத்திற்கு பிறகு எங்களுக்கு தலைமுடி வெட்ட மாட்டினமாம். அதுதான் கண்டிக்கு போய் வெட்டிக்கொண்டு வரவேணும். ஏயர் ரிக்கற்றும் புக் பண்ணி தாங்கோ.

கொமாண்டர்: ???


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 166

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | 3 |
| | | | | | 4 | | |
| 5 | | | | | | | 6 |
| | | | | | | | |
| | 7 | | | | 8 | 9 | |
| | | 10 | | 11 | | | |
| | | | | | | | |
| 12 | | 13 | | | | 14 | 15 |

**இட - வல**

1. முடிவுறச்செய்
3. குரங்கு (வல - இட)
5. இலை
6. முடிவு (வல-இட)
7. நிலா (வல-இட)
9. சொல்லு (வல-இட)
10. அறிஞன்
12. அமைத்தல்
13. புழுதி

**மேல் - கீழ்**

1. குற்றமற்றவன்
2. சம்பளம்
3. பனை ஓலை / நாரினால் செய்யப்பட்டது
4. நெருப்பு
8. யானையின் குட்டி
11. நிறம் (கீழ் - மேல்)
12. இரவு (கீழ் - மேல்)
13. நெஞ்சு (கீழ்-மேல்)
15. முறம் (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு | ண் | ணா | க | ம் | | னி | நு |
| ய | | அ | ணி | | | | ங் |
| ம் | | | | கு | க் | ட | கு |
| வ | ச | ன | ந | டை | | | |
| ர | | | ட் | | ப | ட | கு |
| ம் | வ | ரு | பு | | சி | | ங் |
| | | | | ஆ | | த | ரு |
| நு | ணு | க் | க | ம் | | ய் | நெ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் August 29, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

165இல் வெற்றி பெற்றோர்
1) K. Jegan, Toronto
2) P. Thayaparan, Mississauga

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



# KITCHEN - CABINETS & COUNTER TOP





பல புதிய வடிவங்களில் உங்கள் சமையலறைகளை நவீன முறையிலும் அழகாகவும் வடிவமைத்துக்கொள்ளலாம்.



- Quality
- Reasonable Price

Call: 416.399.6640

## Sulang Kirilli (Wind Bird) 2004

இயக்குனர்: Inoka Satyangani
நடிகர்கள்: Dhamitha Abeyratne, Linton Semage, Jayani Senanayake
இசை: Navarthna Gamage
மொழி: சிங்களம்
